விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (18.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## புலிகளின் தலைவர் பிரபாகரன்
# சரணடையும் எண்ணம் கொண்டவர் அல்ல!



### தந்தி தொலைக்காட்சிக்கு மகிந்த ராஜபக்ஷ செவ்வி



(சென்னை) தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சரணடையும் எண்ணம் கொண்டவர் அல்ல என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். (03-ம் பக்.)

### கிளிநொச்சியில் 4 கிலோ கஞ்சா நேற்று மீட்பு

(பரந்தன்)

சூட்சுமமாக முறையில் எடுத்து செல்லப்படவிருந்த கேரள கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. நேற்று கிளிநொச்சி 24

### முல்லைத்தீவில் வாளுடன் இளைஞர் ஒருவர் கைது

(பரந்தன்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் வாள்வெட்டு குழுவை சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 24

போதையை ஒழிக்க

### தனிப் பொலிஸ் பிரிவு ஆரம்பம்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்கள், பாவனைகள் தொடர்பான முறைப்பாடுகளை வழங்க பொலிஸ் தலைமையகத்தில் சிறப்புப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளதாக 24

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதிமன்றில் இன்று ஆஜர்

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இன்று நீதிமன்றில் ஆஜராகவுள்ளார்.

இன்று 18-ம் திகதி முதலமைச்சர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் குற்றப்பத்திரம் வாசிக்கப்படுமென ஏற்கெனவே நீதிமன்றம் அறிவித்திருந்தது. குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டால், இந்த வழக்கிலிருந்து முதலமைச்சரால் இலகுவில் வெளியேற முடியுமா என்பது சந்தேகமே.

இன்றைய வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றம் 24

### யாழ். பல்கலையில் சிறப்பாக நடைபெற்ற தமிழ் விழா- 2018



06

தாக்குதலுக்கு உள்ளானவர்

### சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு


(கிளிநொச்சி)

அடி காயங்களுக்கு உள்ளானவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதில் உள்ள விடுதி ஒன்றில் கத்திக் குத்து சம்பவம் ஒன்று கடந்த 14-ம் திகதி இடம்பெற்றுள்ளது. கத்தியால் குத்திய வரை இருவர் சரமாரியாக தாக்கியுள்ளனர். கத்திக் 24

### தமிழரின் பெருமையும் சிந்திய இரத்தமும் நினைவூட்ட வேண்டியிருப்பது வேதனையே

#### தமிழ் விழாவில் இந்திய ஓவியர் புகழேந்தி



(யாழ்ப்பாணம்)

தமிழனின் பெருமைகளையும், நாம் சிந்திய இரத்தத்தையும் தமிழர்களுக்கே நினைவூட்ட வேண்டியிருப்பது வேதனையாக உள்ளது என தெரிவித்த புகழ் பெற்ற இந்திய ஓவியர் புகழேந்தி, உணர்ச்சி அற்ற அறிவும் அறிவில்லாத உணர்ச்சியும் இனிமேல் தமிழனுக்கு தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழமுதம் எனும் தொனிப் பொருளில் அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் 24

### 20-வது திருத்தம் தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்குக

#### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்து 24

### புலிகளை இனியும் சிறையில் அடைப்பது அர்த்தமற்றது

#### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

பயங்கரவாத யுத்தம் முடிவுற்று 10 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் யுத்தக் குற்றச்சாட்டுகளில் புலிகளைத் தடுத்து வைப்பது பொருத்தமான நடவடிக்கை 24

### 5-வது நாளாக அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளின் வாக்குறுதியை நம்பி எதிர்பார்ப்புடன் 5 ஆவது நாளாக அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் 23

தமிழின அழிப்புக்கு நீதி கோரி

### ஜெனிவாவில் மாபெரும் போராட்டம் முன்னெடுப்பு

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற தமிழின அழிப்பிற்கு நீதி கோரி ஜெனிவாவில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பூங்காவிலேயே நேற்று திங்கட்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

புலிக்கொடி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தையும் ஏந்தியவாறு போராட்டத்தில் 24

### கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராட்டம்

#### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் மாகாணம் தழுவிய ரீதியில் போராட்டம் 23

## ஊடகவியலாளரை அச்சுறுத்தியமை

# கிழக்கு மாகாண சுதந்திர ஊடகவியலாளர்கள் கண்டனம்

(மட்டக்களப்பு)

வட மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் ஊடக இணைப்பாளர் என தொலைபேசியூடாக தன்னை அறிமுகப்படுத்திய நபர் ஒருவர் வடபகுதியிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் அலுவலக ஊடகவியலாளரை அச்சுறுத்தியமை கண்டிக்கத்தக்கது என கிழக்கு மாகாண சுதந்திர ஊடகவியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை விடுக்கப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடபகுதியில் இருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் அலுவலகத்தில் கடமையாற்றும் ஊடகவியலாளருக்கு தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்திய வட மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் இணைப்பாளர் என அறிமுகப்படுத்திக் கொண்ட நபர் தன்னை அச்சுறுத்தினார் என அந்த ஊடகவியலாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை வரவேற்கும் அதேவேளை சம்பந்தப்பட்டவர்கள் என்ன பின்னணியைக் கொண்டிருந்தாலும் அதனையிட்டு தராதரம் பார்க்காது பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊடகவியலாளரை மட்டுமல்ல, கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் எவரையும் யாரும் அச்சுறுத்தல் செய்ய முடியாது.

ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த கருத்துச் சுதந்திரத்தையும் அடக்கி ஒடுக்க எவராவது முயற்சி மேற்கொண்டால் அது சம்பந்தப்பட்டவர்களின் தோல்வியாகவே வரலாறு எழுதப்படும்.

கருத்தைக் கருத்தால் வெல்ல வேண்டுமே தவிர ஒருபோதும் அச்சுறுத்தி அடக்கியாள முடியாது.

கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முனைவோர் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊடகங்களில் வெளியாகும் விடயங்களில எவருக்காவது உடன்பாடில்லாத நிலைமை அல்லது மாற்றுக் கருத்து இருக்குமாயின் அவர்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குரிய அல்லது நிவாரணம் பெறுவதற்குரிய வன்முறைசாராத மாற்றுவழிகளைத் தேடவேண்டும்.

அதுதான் வளர்ச்சியடைந்த மனித சமுதாயத்தின் நாகரிகம் மிக்க வழிமுறையாகும்.

மேலும் மாற்றுக் கருத்துக் கொண்டோரும் ஏனையோரும் அறிவுப் புலத்தோடு உரசிப் பார்த்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை மேற்கொண்டு அழிவுகளைத் தவிர்த்து நாட்டு மக்களிடையே அபிவிருத்தியையும் அமைதியையும் ஏற்படுத்துவதே சகலரதும் சமகாலத் தேவையாகும் என்று அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## தலைமன்னார் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவரைக் காணவில்லை

(மன்னார்)

தலைமன்னார்-பியரிலிருந்து படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இதையடுத்து தலைமன்னார் கடற்படையினரும், அப் பகுதி மீனவர்களும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 6 மணியளவில தலைமன்னார் பியரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராமசாமி சிறிகாந் (வயது 30) வழமைபோன்று படகு ஒன்றில் தனிமையாக மீன் பிடிக்கச் சென்றுள்ளார். நேற்று காலை அப் பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்றவர்கள் கடலில் படகு ஒன்று வலைகள் இடப்பட்ட நிலையில் இருப்பதை அவதானித்தனர். இதையடுத்தே, படகில் மீன் பிடிக்கச் சென்றவர் காணாமல் போனது குறித்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் மற்றும் தலைமன்னார் கடற்படையினருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து தலைமன்னார் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருவதுடன் தலைமன்னார் கடற்படையினரும் அப் பகுதி மீனவர்களும் காணாமல்போன மீனவரை தேடி வருகின்றனர். (ம)

## ஹெரோயினுடன் பாக். பிரஜை கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருளுடன் இலங்கை வந்த பாகிஸ்தானியர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கராச்சியிலிருந்து ஓமானின் தலைநகர் மஸ்கட்டிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க வந்த குறித்த நபரிடமிருந்து 1606 கிராம் (1.606kg) ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பதில் ஊடகப் பேச்சாளர் விபுலமினுவன்பிட்டிய தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி ரூபா 1 கோடி 60 இலட்சத்து 60 ஆயிரம் என கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த விமானத்தில் நேற்று காலை 8.15 மணியளவில் வந்த, பாகிஸ்தான் நாட்டவரின் பயணப் பொதியை பரிசீலித்த சுங்கத் திணைக்கள கட்டுநாயக்கா பிரிவு அதிகாரிகள், பயணப்பொதியில் போலியாக தயாரிக்கப்பட்ட அடியில் சூட்சமமாக மறைத்து வைக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட ஹெரோயின் பொதியை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து, சுங்கத் திணைக்கள போதைப்பொருள் பிரிவு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ம)

## நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் 60 வீதமேனும் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

மதிப்பாய்வுகள் தொடர்பான முதலாவது உலகளாவிய மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பயணிக்கும் நாடு என்ற வகையில் வினைத்திறனின் முன்மாதிரியை முதலில் வழங்க வேண்டியது நாடாளுமன்றில் ஆகும்.

நாடாளுமன்றின் வினைத்திறன் அரச சேவையின் வினைத்திறனில் தாக்கம் செலுத்துவதுடன், அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு இந்த அனைத்து துறைகளினதும் வினைத்திறன் மிகவும் முக்கியமானதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு வருகை தருகின்ற நாட்களின் எண்ணிக்கை அந்த வினைத்திறனை பேணுவதில் முக்கிய அம்சமாகும்.

இன்று பெண்களின் வினைத்திறன் உயர்ந்த மட்டத்தில் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதற்கேற்ப நாடாளுமன்றின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்றில் 10 இற்கும் குறைவான சதவீதத்திற்கும் குறைவான பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கரைச்சி பிரதேச சபை தவிசாளரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸ் விசாரணை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவியமை அதில் ஈழம் என்ற சொல் பொறிக்கப்பட்டமை தொடர்பில் கரைச்சிப்பிரதேச சபையினுடைய தவிசாளர் அ.வேழமாலிகிதனிடம் பயங்கரவாதத்தடுப்பு பிரிவுப்பொலிஸார் கொழும்பில் மூன்று மணி நேரம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினுடைய தவிசாளரை நேற்றைய தினம் கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் விசாரணைப்பிரிவில் முன்னிலையாகுமாறு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் ஊடாக விடுக்கப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நேற்றுக் காலை பயங்கரவாதத்தடுப்புப்பிரிவு விசாரணைப்பிரிவில் முன்னிலையாகி அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (ம-315)

## துணிகளுக்கான வற் வரி குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கான வற் வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சினால் நேற்று திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்கிழமை முதல் இந்த வற் வரி குறைப்பு முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதற்கான வர்த்தமானி அறிவித்தலில் அமைச்சர் மங்கள சமரவீர கையெழுத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு தயாரிக்குமாறு கல்வி அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் சேவையில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு அமைச்சு மட்டத்தில் பிரேரணையொன்றை தயாரிக்குமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ்காரியவசம் தனது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள் ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அமைச்சர் இந்த ஆலோசனையை விடுத்துள்ளார். (ம)


விற்பனைக்கு

404 டீசல் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0776557498

(5703)


## வடக்கில் 134 அரச ஊழியர்கள் நியமனம்

வடமாகாண பொதுச்சேவையின் கீழ் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான அரச ஊழியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்றுள்ளதுடன் 134 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 42 சாரதிகளுக்கும் 73 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மகளிர் விவகார அமைச்சின் கீழ் 19 பேருக்கும் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.(ம-60)

## வடக்கில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும்

### விஜயகலா எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண் டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நல்லாட்சி அரசினால் வடக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிலும் குறிப்பாக முன்னைய அரசாங்கத்தினால் புறந்தள்ளப்பட்ட மாற்றுத்திறனாளிகள், பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்தினர் மற்றும் முன்னாள் போராளிகளுக்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் இந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும் வேலைவாய்ப்பு பிரச்சினையை தீர்ப்பதற்கு வடக்கில் புதிதாக தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கில் உள்ள முன்னாள் போராளிகள் பலர் தமது தொழிலை தேடுவதற்கு உரிய கல்வி தகுதி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.


எனவே வடக்கில் புதிய தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகளை வழங்கமுடியும். எனினும் வடக்கிற்கு முதலீடு செய்ய வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இந்த விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம)

# தலைவர் பிரபாகரன் சரணடையும் எண்ணம் உள்ளவர் அல்ல

## தந்தி தொலைக்காட்சிக்கு மகிந்த பேட்டி

- போரில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை
- அப்பாவி மக்களைக் கொல்லவில்லை
- வெளிநாட்டுப் படையினரை அழைக்கவில்லை
- புதிய அத்தியாயம் ஆரம்பம்; பிரதமராகப் பேட்டி



(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு சரணடைய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவர் சரணடையும் எண்ணம் உள்ளவர் அல்ல என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தந்தித் தொலைக்காட்சிக்கு டில்லியில் வைத்து மகிந்த அளித்துள்ள செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

**கேள்வி:- தமிழர்கள் உங்களுக்கு எதிரிகளா ?**

பதில்:- தமிழர், ஒடிசா, என்று நாங்கள் பிரித்துப் பார்ப்பதில்லை. தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்தியர்கள் அனைவரும் நண்பர்கள்.

**கேள்வி:- இந்தியா- தலைமன்னார் இடையே பாலம் கட்டப்படலாமா ?**

பதில்:- இந்தியா- தலைமன்னார் இடையே படகுப் போக்குவரத்து உள்ளது. இதனால் பாலம் தேவையில்லை. ராமர் பாலத்தை இடிக்க வேண்டியிருக்கும். இதற்கு செலவு அதிகம் ஆகும்.

**கேள்வி:- செலவை இந்தியா ஏற்றுக் கொண்டால் ?**

பதில்:- அப்படி இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனாலும் அது சாத்தியமில்லை.

**கேள்வி:- இலங்கைக் கடற்படையினரால் தமிழ் நாடு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்களே ?**

பதில்:- நாங்கள் யாரையும் சுடுவதில்லை. சில நேரங்களில் தவிர்க்க முடியாமல் ஒருசில சம்பவங்கள் நடந்துள்ளன. தமிழ்நாடு மீனவர்கள் கொல்லப்படுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இது தொடர்பாக இரு நாடுகளும் பேசித் தீர்க்க வேண்டும்.

மீனவர்களுக்கு அனைத்துலக எல்லை தெரிவதில்லை. மீனவர்கள் எல்லை தாண்டும் போது இரு தரப்பினருக்கும் மீன் கிடைக்காமல் போய்விடும். இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும்.

எல்லைகள் மதிக்கப்பட வேண்டும். மீனவர்களை கைதுசெய்து விடுவித்து விடுகிறோம். படகுகளை மட்டுமே பறிமுதல் செய்கிறோம்.

**கேள்வி:- இறுதிப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டது குறித்து ?**

பதில்:- பிரபாகரன் உயிரோடு இன்னும் இருந்திருந்தால் இன்னும் பலரைக் கொன்றிருப்பார். இந்தியாவிலும் இலங்கையிலும் பலரது உயிரைப் பறித்திருப்பார்.

பிரபாகரனுக்கு சரணடைய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவர் சரணடையும் எண்ணம் உள்ளவர் அல்ல. சரணடைய வெளிப்படையாக அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் சரணடைந்திருந்தால் நாங்கள் கைது செய்திருப்போம்.

பிரபாகரன் இறந்த பிறகு இலங்கை வளர்ச்சி பெற்றுள்ளது. வெற்றி பெறுவோம் என்ற அதீத நம்பிக்கை வைத்திருந்தார் பிரபாகரன். ஆனால், அவரது படைகள் பலம் இழந்தன. இதனால் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை.

**கேள்வி:- பிரபாகரன் கடைசி நிமிடம் குறித்து ?**

பதில்:- நான் அந்தநேரத்தில் இலங்கையில் இல்லை. இராணுவ அதிகாரிகள், இரு தரப்பினர் இடையே நடந்த சண்டையில் பிரபாகரன் கொல்லப்பட்டார் எனத் தெரிவித்தனர். அவ்வளவு தான் தெரியும்.

**கேள்வி:- இலங்கைப் போருக்கு இந்தியா உதவியதா?**

பதில்:- இந்தியா மட்டுமல்ல, பல நாடுகள் உதவின. அதனால் எதிரிகளை முடித்துக்கட்ட முடிந்தது. இந்தியாவின் உதவி பாராட்டுதலுக்குரியது.

**கேள்வி:- அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக உங்கள் மீது குற்றம்சாட்டப்படுகிறதே? உங்களுக்குச் சங்கடமாக இல்லையா ?**

பதில்:- இவை சித்திரிக்கப்பட்டவை. வேண்டுமென்றே பரப்பப்பட்டது. இது அரசியல் சாயம். அப்பாவி மக்கள் கொல்லப்படக்கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருந்தோம். இதனால் நாங்கள் பல இராணுவ வீரர்களை இழந்தோம். வெளிநாட்டுப் படையினரை நாங்கள் அழைக்கவில்லை. கனரக ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை.

**கேள்வி:- அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கு நீங்கள் தான் பொறுப்பு என்று கூறப்படுகிறதே ?**

பதில்:- இது தவறானது. அரசியலுக்காகக் கூறப்படுகிறது.

**கேள்வி:- ராஜீவ்கொலையாளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது குறித்து பெரும் விவாதமே நடந்து கொண்டிருக்கிறது. இது குறித்து உங்கள் கருத்து என்ன ?**

பதில்:- இது இந்தியாவின் உள்நாட்டு விவகாரம். இந்தியா தான் முடிவு எடுக்க வேண்டும். நாங்கள் தலையிட விரும்பவில்லை.

**கேள்வி:- இந்தக் குற்றவாளிகளில் இலங்கையைச் சேர்ந்தவரும் உள்ளனரே, இலங்கைக்குள் நுழைய அனுமதிப்பீர்களா?**

பதில்:- இலங்கைக் கடவுச்சீட்டு வைத்திருக்கும் யாரும் வரலாம். விடுதலை ஆகட்டும். அதன் பின்னர் நான் பதில் சொல்கிறேன்.



**கேள்வி:- போரின் போது, மத்திய அரசு மூலம் தி.மு.க. இலங்கைக்கு அழுத்தம் கொடுத்ததா?**

பதில்:- நாங்கள் புலிகளை அகற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். இருப்பினும் இந்திய மத்திய அரசின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்தோம். இதனால் போரில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை.

**கேள்வி:- தற்போது தமிழ்நாட்டில் கருணாநிதி, ஜெயலலிதா இல்லை. அடுத்து யார் தலைவராகும் வாய்ப்பு உள்ளது?**

பதில்:- இது எனக்குத் தெரியாது. மக்கள் தான் தங்களுக்கு வேண்டிய தலைவர்களைத் தேர்வு செய்வார்கள்.

**கேள்வி:- ரஜினி, கமல் அரசியல்வருவது குறித்து?**

பதில்: இருவரும் வருவதை நான் வரவேற்கிறேன். இருவரது திரைப்படங்களையும் நான் பார்த்து ரசிப்பவன். சினிமாவை விட அரசியல் மிகக் கடினமானது என்று அவர்களுக்குத் தெரியும். யார் வேண்டும் என்பதை மக்கள் தான் முடிவு செய்வார்கள்.

**கேள்வி:- நீங்கள் மீண்டும் ஜனாதிபதியாக வருவதைத் தடுக்க சட்டம் திருத்தப்பட்டுள்ளதாமே?**

பதில்:- பிரதமர் பதவிக்கே அதிகாரம் உள்ளது. மக்கள் என்னோடு இருக்கின்றனர். இதனால் நான் இன்றும் அரசியலில் இருக்கிறேன். எல்லாம் முடிந்து விட்டது. இனி புதிய அத்தியாயம் தொடங்குவோம்.(இ-7)

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உறவுப்பாலமாக தமிழக அரசு

## அமைச்சர் செங்கோட்டையன் உறுதி



(கண்டி)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் தமிழ் மக்களுக்கும் ஓர் உறவுப் பாலமாக தமிழக அரசு என்றும் இருக்கும் என இந்திய தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

என்றும் தமிழக அரசு இலங்கை மக்களுக்கு உறுதுணையாக இருக்கும். இங்கு மக்கள் சிந்துகின்ற கண்ணீர் துடைக்கப்படும். மக்களுடைய நலன் காக்கப்படும். இலங்கையும் இந்தியாவும் ஒரு சகோதர பாசத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கு என்றும் தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என நான் உறுதியளிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமல் வீரவன்சவுக்கு எதிராக திருத்தப்பட்ட முறைப்பாடு



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்ட ஆறுபேருக்கு எதிராக கறுவாத் தோட்ட பொலிஸார் திருத்தப்பட்ட முறைப்பாட்டைத்தாக்கல் செய்துள்ளனர். கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்த உத்தரவை நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வழங்கவுள்ளதாக பிரதான நீதவான் ரங்க திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்திற்கு முன்பு மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் பொலிஸார், விமல் வீரவன்ச உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக இதற்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில், பிரதிவாதி இல்லாமல் இந்த வழக்கு விசாரணைக்காக நேற்றுக் காலை திருத்தப்பட்ட முறைப்பாடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(இ-7)



# முத்தான முதல் கோல்

'சீரீ ஆ' லீக்கின் 4ஆவது ஆட்டத்தில் கிறிஸ்ரியானோ ரொனால்டோ தனது முதல் கோலை யுவான்டஸ் அணிக்காக பதிவு செய்தார்.

இதற்காக அவர் 320 நிமிடங்கள் காத்திருந்தார். உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக திகழ்பவர் அளித்தார்.

யுவான்டஸ் அணிக்காக கோல் கணக்கை தொடங்காத ரொனால்டோ, நேற்று 4ஆது ஆட்டத்தில் சஸ்சுவோலா அணிக்கெதிராக களம் இறங்கினார்.

முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. அதன்பின் 2ஆவது பாதி நேரத்தில் யுவான்டஸ் அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் ரொனால்டோ முதல் கோலை அடித்தார். இதன்மூலம் யுவான்டஸ் அணிக்கான முதல் கோலை பதிவு செய்தார். அத்துடன் அல்லாமல் 65ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலை பதிவு செய்தார்.

சஸ்சுவோலா அணியைச் சேர்ந்த கவுமா பாபகார் இன்ஜுூரி நேரமான 91ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க யுவான்டஸ் 2-1 என வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் யுவான்டஸ் நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்று 12 புள்ளிஞுடன் முதல் இடத்தில் உள்ளது. நபோலி 9 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ.

யுவான்டஸ் அணிக்காக முதல் கோலை அடித்து சிலிர்க்கும் ரொனால்டோ

ஸ்பெயின் லா லிகா ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வந்த இவர், தற்போது இத்தாலியின் யுவான்டஸ் அணிக்கு மாறியுள்ளார்.

ரொனால்டோ 'சீரீ ஆ' சீசனில் யுவான்டஸ் அணி விளையாடிய முதல் மூன்று போட்டிகளிலும் பங்கேற்றார். ஆனால் மூன்று போட்டிகளிலும் கோல் அடிக்காமல் ஏமாற்றம்



3 விக்கெட்டுக்களை வீழ்த்தி பாகிஸ்தானின் வெற்றிக்கு வழிசமைத்த உஸ்மான் கான்

# ஹொங் கொங்கை பந்தாடியது பாகிஸ்தான்

உஸ்மான் கானின் அசத்தல் பந்துவீச்சு கைகொடுக்க, கத்துக்குட்டி ஹொங் கொங் அணியை பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் ஊதித்தள்ளியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் 14ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் டுபாயில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி தகுதிச்சுற்று மூலம் முன்னேறிய ஹொங் கொங் அணியை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹொங் கொங் அணியின் அணித் தலைவர் ஆன்சுமான் ராத் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

எதிர்பார்த்ததுபோலவே, பாகிஸ்தான் அணி ஆதிக்கம் செலுத்தியது. ஹொங் கொங் அணிக்கு நிஷாகத் கான், ஆன்சுமான் ராத் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது.

ஷாதப்பின் துல்லிய 'த்ரோவில்' நிஷாகத் (13) ரன் அவுட்டானார். பகீம் 'வேகத்தில்' ஆன்சுமான் (19) ஆட்டமிழந்தார். ஷாதப் கான் 'சுழலில்' பாபர் ஹயத் (7), எசான் கான் (0) சிக்கினர்.

**உஸ்மான் அபாரம்**

உஸ்மானின் 31ஆவது ஓவரின் இரண்டாவது பந்தில் அய்சாஸ் (27) போல்டானார். தொடர்ந்து அசத்திய உஸ்மான் 5,6வது பந்துகளில் முறையே மெக்கெனே, தன்வீரை டக் அவுட்டாக்கி ஆர்ப்பரித்தார். மற்றையவர்களும் ஏமாற்ற, ஹொங் கொங் அணி 37.1 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக உஸ்மான் 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**இமாம் அரைச்சதம்**

எளிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு பகர் ஜமான், இமாம் உல் ஹக் சிறப்பான ஆரம்பம் கொடுத்தனர்.

தன்வீர் பந்துவீச்சில் பகர் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். இவர் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மூன்று பவுண்டரி விளாசிய பாபர் அசாம் 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நவாஸ் பந்தில் சிக்சர் அடித்த இமாம் அரைச்சதம் கடந்தார். சோயப் மலிக் பவுண்டரி அடிக்க வெற்றி உறுதியானது.

இறுதியில், பாகிஸ்தான் அணி 23.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (120 ஓட்.,) 8 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இமாம் (50), மலிக் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## 116

இப்போட்டியில் சொதப்பிய ஹொங் கொங் அணி 116 ஓட்டங்களுக்கு சுருண்டது. இது, டுபாய் மைதானத்தில் நடந்த ஒரு நாள் போட்டியில் குறைந்தபட்ச ஓட்டஎண்ணிக்கையாக பதிவானது. இதற்கு முன், இதே தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 124 ஓட்டங்கள் எடுத்ததே (எதிர் பங்களாதேஷ்) குறைவாக இருந்தது.

## 2000

பாகிஸ்தானின் பாபர் அசாம் 27 ஓட்டங்கள் எடுத்தபோது, ஒரு நாள் போட்டியில் 2 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம், இந்த இலக்கை (45 இன்னிங்ஸ்) வேகமாக எட்டிய இரண்டாவது வீரர் என்ற பெருமையை ஜாகிர் அப்பாஸ் (பாக்.,), பீற்றர்சன் (இங்கிலாந்து) ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் அம்லா (40 இன்னிங்ஸ்) உள்ளார்.



பயிற்சியின்போது ரோகித்

# பாகிஸ்தானுடனான பாய்ச்சலுக்கு இந்தியா இன்று பயிற்சி

ஆசியகிண்ண லீக் போட்டியில் இன்று இந்திய அணி, ஹொங் கொங்கை சந்திக்கிறது. நாளை பாகிஸ்தானுக்கு எதிரான மிகப் பெரிய பாய்ச்சலுக்கு தயாராக, இப்போட்டி சிறந்த பயிற்சி யாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆறு நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்கிறது.

இதில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, இன்று தனது 'முதல் லீக் போட்டியில்' அனுபவம் இல்லாத ஹொங் கொங்கை சந்திக்கிறது.

ஹோலி இல்லாத நிலையில் பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா தலைமையில் களமிறங்கும் இந்திய அணி வீரர்கள் இப்போட்டியை எளிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். மறுநாள் பாகிஸ்தானுடன் மோதவுள்ள நிலையில், இப்போட்டியின் வெற்றி பெரிதும் தன்னம்பிக்கை கொடுக்கலாம்.

அணியின் ஆரம்பத்துக்கு வழக்கம் போல ஷிகர் தவான், ரோகித் சர்மா வர காத்திருக்கின்றனர். 'நடுத்தர வரிசையில்' ஓவல் டெஸ்டில் அசத்திய லோகேஷ் ராகுல், காயத்தில் இருந்து மீண்ட கேதர் ஜாதவ் ஓட்டங்கள் சேர்த்து உதவலாம்.

**தோனி பலம்**

சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் ஏமாற்றி வரும் 'சீனியர்' விக்கெட் காப்பாளர் தோனியின் செயற்பாடு இத்தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு உலக கிண்ணம் தொடர் வரவுள்ள நிலையில் அணியில் தனது தேர்வை நியாயப்படுத்த வேண்டும்.

துடுப்பாட்டத்தில் இம்முறை தோனி 6 அல்லது 7ஆவது இடத்தில் களமிறங்கலாம். இது அடுத்த போட்டியில் பாகிஸ்தானின் வலிமையான பந்துவீச்சு படையை கடைசி நேரத்தில் எதிர்கொள்ள இந்தியாவுக்கு உதவியாக இருக்கும். 'சகல துறை வீரர்' பாண்ட்யாவும் தன் பங்கிற்கு ஓட்டங்கள் சேர்த்தால் நல்லது.

**புவனேஷ்வர் வருகை**

பந்துவீச்சில் கடந்த ஒரு ஆண்டாக நீடிக்கும் புவனேஷ்வர், பும்ரா கூட்டணி இம்முறையும் தொடர உள்ளது. முதுகுப் பகுதியில் ஏற்பட்ட வலியால் இங்கிலாந்து தொடரில் பங்கேற்காத புவனேஷ்வருக்கு, இப்போட்டி நல்ல பயிற்சிக்களமாக அமையும். இவர்களுடன் சகால், குல்தீப் யாதவ் என இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் மீண்டும் இணையும் பட்சத்தில் வெற்றி எளிதாக கிடைக்கலாம்.

**கட்டாய வெற்றி**

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் போட்டியில்தோற்ற ஹொங் கொங், இன்றைய போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டும். இல்லை எனில் 'சுப்பர் 4' சுற்றுக்கு தகுதி பெற முடியாது. தொடரில் இருந்து வெளியேற நேரிடும்.

இவர்கள் இன்று இந்தியாவுக்கு சவால் கொடுத்தாலே பெரிய விடயம்தான்.

**கொளுத்தும் வெயில்**

டுபாயில் வெயில் கொளுத்துகிறது. வெப்பநிலை 43 டிகிரி செல்சியஸ் வரை இருப்பதால் வீரர்கள் சோர்வடைகின்றனர். மழை வர வாய்ப்பு இல்லை.

# பிக் பொஸில் ஸ்ரீசாந்த்

'பிக் பொஸ்' இந்தி நிகழ்ச்சியின் 12ஆவது சீசனில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் பங்கேற்றுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் (வயது-35). ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் நடந்த சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய இவருக்கு இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) வாழ்நாள் தடை விதித்தது. இதை எதிர்த்து நீதிமன்றில் போராடி வருகிறார்.

தற்போது பிரபலமாக உள்ள இந்தி 'பிக் பொஸ்' நிகழ்ச்சியின் 12ஆவது சீசனில் பங்கேற்பாளராக சென்றுள்ளார் ஸ்ரீசாந்த். அவர் கூறியதாவது,

'பிக் பொஸ்' நிகழ்ச்சியில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. இது உண்மையானது. கடந்த 2011ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சிக்கு செல்ல இருந்தேன். அப்போது நடக்கவில்லை என்றாலும் தொடர்ந்து 'ரிவி' நிறுவனத்துடன் தொடர்பில் இருந்தேன். இடையில் நான்கு சினிமாவில் நடித்து விட்டேன். கிரிக்கெட் வீரர் என்றில்லாமல் நடிகன் என்ற முறையில் பங்கேற்றுள்ளேன். இவ்வாறு ஸ்ரீசாந்த் கூறினார்.

## விவசாய சம்மேளன கூட்டம்

நாவற்குழி மேற்கு விவ சாய சம்மேளன உறுப்பினர் களுக்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 26.09. 2018 புதன்கிழமை முற்ப கல் 10 மணியளவில் இ.சொக் கலிங்கம் தலைமையில் குட்டிப்பிள்ளையார் கோவி லடியிலுள்ள செயலாளர் இல்லத்தில் நடைபெறும்.

மேலும் 2018 பெரும் போகத்திற்கான உரமா னிய விண்ணப்பப்படிவங்கள் பூர ணப்படுத்தும் வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின் றன. விண்ணப்பப்படிவங்க ளில்கையெழுத்திட்டும் அடை யாள அட்டையின் பிரதி ஒன் றையும் இவ்வரு டத்திற்கான சந்தாப்பணம் அறுபது ரூபாவை செலுத்து மாறும் கேட்டுக் கொள்ளப்பட்டு ள்ளது. (இ)

## வருடாந்த மஹோற்சவம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கெருடாவில் ஸ்ரீ கந்த சுவாமி கோவில் வருடாந்த மஹோற்ச வம் கடந்த 15 ஆம் திகதி கொடியேற்ற த்துடன் ஆரம்பமா னது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத் தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக் கி ழமை மாலை 5 மணிக்கு வேட் டைத் திருவிழாவும் மறுநாள் இரவு 8 மணி க்கு சப்பறமும் 23 ஆம் திகதி காலை 9.30 இற்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற் சவமும் இடம் பெறவுள்ளது. (இ-29)


## மீள் கேள்வி கோரல்
## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## வடக்கு மாகாண சபை.

### கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றுவதற்கான திட்டத்திற்காக மாத அடிப்படையிலான எரி பொருள் மற்றும் சாரதியுடனான வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல்

9 பேர் பயணம் செய்யக்கூடிய வான், ஒருவர் பயணம் செய்யக்கூடிய நாய்கள் ஏற்றக் கூடிய ரக் வகை வாகனம், முச்சக்கரவண்டி.

கேள்வி இல: BID N0 – NP/AP& H/DD OFFICE/JAFFNA/PSDG/2018/VEHICLE HIRE

1.கீழே பட்டியலிடப்பட்ட உருப்படிகளுக்கான தகுதி வாய்ந்த தனிநபர் அல்லது நிறுவன விலைமனுதாரர்களிடமிருந்து 03 மாத காலப்பகுதிக்கான வாடகைக்கு அமர்த்து வதற்காக முத்திரையிடப்பட்ட விலை மனுக்களை தலைவர் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் சார்பாக பிரதிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள பெறுகைக்குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| Item No | Description | Qty | Bid Security per one vehicle |
|---|---|---|---|
| 1 | Van 9 Seats | 2 | 6,000.00 |
| 2 | Single Cab (Semi Closed ) | 2 | 6,000.00 |
| 3 | Three Wheeler | 2 | 4,000.00 |

2.விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.

3.ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பிரதிப் பணிப் பாளர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இல. 25, கருணாலய லேன், பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணி யிலிருந்து பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி/ தொலைநகல் 021 222 2387, மின்னஞ்சல்: adaphjaffna@gmail.com.

4.2018 புரட்டாதி 18 ஆம் திகதியிலிருந்து 2018 ஐப்பசி 01 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3 மணி வரையும் மீளளிகப்படாத கட்டணமாக 1000/- ரூபாவை பணமாகச் செலுத்திய பின்னர் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கீழேயுள்ள முகவரியிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம்.

5.விலைமனுக்கள் 2018 ஐப்பசி 02 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். உரிய நேரத்திற்கு பிந்தி கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக் கப்படும். அனைத்து விலைமனுக்களுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைமனுப் பிணைமுறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6.மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு பிரதிப் பணிப்பாளர் அலுவல கம், கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், இல.25, கருணாலய லேன், பலாலி வீதி, திருநெல்வேலி.

டாக்டர். திருமதி.வ.அமிர்தலிங்கம்
தலைவர், திணைக்கள பெறுகைக்குழு,
கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், யாழ்ப்பாணம். (சி-3864)



## கிருஷ்ணா அடகு சேவை
## பதிவு இல.J/DS/BR/472

*மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2018 ஆம் ஆண்டு 28.02.2018 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி (15.10.2018) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10.2018 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.*

*(2017 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் 28 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்).*

**உரிமையாளர் :** A.S.SURENDRAN

இல.370,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(சி-3860)


## இதய சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தனுக்குப் பாராட்டு விழா



(சாவகச்சேரி)

தென்மராட்சி மட் டுவில் மண்ணின் மைந்தரும் யாழ். போதனா வைத்திய சாலை யில் முதன் முதலாக திறந்த இதய சத்திரசிகிச் சையை வெற்றிக ரமாக மேற்கொண் டவருமாகிய டாக்டர் சி.முகு ந்தனைப் பாராட்டிக் கௌர விக்கும் வைபவம் எதிர் வரும் 07.10. 2018 ஞாயிற் றுக்கி ழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச் சேரி சிவன் கோவில் அருகில் உள்ள தென் மராட்சி கலைமன்ற கலாசார மண்ட பத் தில் நடைபெறவுள் ளது. (இ-7)


## பெயர் மாற்றம்

வறுத்தலைவிளான் தெல்லிப்பளையை வசிப் பிடமாகக் கொண்ட சின்னராசா சுகந்தினி ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சின்னராசா சுதர்சினி என தவறுதலாகப் பதியப்பட் டுள்ளது.

எனவே இன்று முதல் சின்னராசா சுகந்தினி என்ற பெயரையே என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக் கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
சின்னராசா சுகந்தினி. (5701)



ஸ்ரீராம ஜெயம்



## இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018
### 13.09.2018 முதல் 22.09.2018 வரை

18.09.2018 இன்று செவ்வாய்க்கிழமை

ஆறாம் நாள் வீணாகான சரஸ்வதி

**இசை அர்ப்பணம்:**

பாட்டு- திருமதி சுகன்ஜா அரவிந்தன்,
வயலின்- திரு.அ.ஜெயராமன்,
மிருதங்கம்- திரு.வ.ரமணா,
கெஞ்சிரா- திரு.நா.சிவசுந்தரசர்மா,
முகர்சிங்- திரு.சி.செந்தூரன்,
கடம்- திரு.கு.ரவிசங்கர்.

021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம். (5652)


## இராசி பலன்

**மீனம்** — மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள், எடுத்த காரியத்தில் முன் னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்** — அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆசி யைப் பெறுவீர்கள்.

**இடபம்** — அல்லல்கள் தீர அம்பி கையை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணங் களால் அலைச்சல்கள் ஏற்ப டலாம், சுற்றத்தாரை அனு சரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்** — நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** — எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும் பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், செவி குளிரும் செய் திகள் வந்து சேரலாம், வரு மானம் திருப்தி தரும்.

**இராசி பலன்**

கிரகநிலை

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்

ராகு

செவ். கேது

சனி, சந்

குரு, சுக்

சூரி, புத

**18.09.2018**

புரட்டாதி 02, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 06.04 மணிக்கு

நவமி முன்னிரவு 10.38 மணிவரை

மூலம் முற்பகல் 11.07 மணிவரை

சுபநேரம் 10.33-12.03 மணிவரை

இராகுகாலம் 03.03-04.33 மணிவரை

வளவன்

**கடகம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பல நாட் களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** — தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், ஆதாய மில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** — பிரபலமானவர்களின் சந்தி ப்பு இடம்பெறலாம், எண் ணங்கள் எளிதில் நிறைவே றும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** — சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, திடீர் பயணத்தால் வழக்க மான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழி பட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பில் ஆர் வம் காட்டுவீர்கள்.

**துலாம்** — நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் நாள், இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக் கலாம், நல்லவர்களின் தொட ர்புகள் கிடைக்கும்.

**கன்னி** — குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், கடன்சுமை குறையும் நாள், கொள் கைப் பிடிப்போடு செயற் படுவீர் கள், வாகன பழு துச் செல வுகள் குறையும்.

# "நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம்" யாழ். பல்கலையில் நேற்று மாபெரும் தமிழ் விழா



(யாழ்ப்பாணம்)

தமிழமுதம் எனும் தொனிப்பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய மாபெரும் தமிழ் விழா- 2018 யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

"நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம்" எனும் கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் பாரம்பரிய தமிழ் கலை கலாசார நடனங்களுடன் ஆரம்பமாகி விருந்தினர்களை வரவேற்றவாறு ஊர்வலமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது. அங்கு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனின் உரையையடுத்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புகழ்பெற்ற இந்திய ஓவியர் புகழேந்தி ஐயாவின் சிறப்புரை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு,



கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம் போன்ற அனைத்து இடங்களையும் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.


(படங்கள்:பொ. சோபிகா)

# யாழ். பல்கலையில் பொங்குதமிழ் நினைவுத்தூபி மாணவர்களால் பெரும் எழுச்சியுடன் நேற்று திறப்பு








(யாழ்ப்பாணம்)

யழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த பொங்குதமிழ் பிரகடன நினைவுப் பதாகை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் தூபியாகப் புனரமைக்கப்பட்டு நேற்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரனால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தி சர்வதேச சமூகத்தை தமிழர் தேசத்தின் பால் திரும்பிப் பார்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வின் நினைவாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் பொங்குதமிழ் பிரகடனம் அமைக்கப்பட்டிருந்தது.

அந்த பதாகையை மேலும் மெருகூட்டும் வகையில் அதை தூபியாகப் புனரமைக்கும் பணியை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

புனரமைக்கப்பட்ட தூபி திரைநீக்கம் செய்யும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கி.கிருஸ்ணமேனன் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பதிவாளர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். (இ-9)

# ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துவது ஊடகச் சுதந்திரத்தை இல்லாமல் செய்யும் நடவடிக்கையே!

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் நிலாம் கடும் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துவது ஊடக சுதந்திரத்தை இல்லாமல்செய்யும் நடவடிக்கையாகும் என யாழ். மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வலம்புரிப் பத்திரிகையின் அலுவலக செய்தியாளர் ஒருவர் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் ஊடகச் செயலாளர் எனக் கூறித் திரியும் நபரால் மிரட்டப்பட்டமையைக் கண்டித்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாண குடாநாட்டு ஊடகங்கள் மீது சில வங்குரோத்து அரசியல்வாதிகளும் அவர்களின் ஆதரவாளர்கள் என்று சொல்வோரும் அச்சுறுத்தல்களை பல்வேறு வழிகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடராகவே வலம்புரி பத்திரிகை அலுவலக செய்தியாளர்ஒருவரை தொலைபேசியில் மிரட்டியதையும் குறித்த செய்தியாளர் தனது பாதுகாப்பிற்காக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையும் பார்க்கின்றோம்.ஏனெனில் ஊடகங்களின் உண்மைச் செய்திகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இவ்வாறானவர்களினால்தான் மக்களின் அபிவிருத்தி திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அச்சுறுத்தல்கள் தொடர்வதனால் மக்களுக்கு சரியான தகவல்களை எடுத்து செல்ல ஊடகங்களால் முடிவதில்லை.தற்போதைய சூழ்நிலையில் எந்தத் தரப்பும் ஊடகங்களின் செய்திகளால் ஏதாவது பாதிப்புகள் எதிர்கொண்டால் அதற்கான பல ஜனநாயக வழிமுறைகள் உள்ளன.

இதைவிடுத்து அச்சுறுத்துவது போன்று நடந்து கொள்வதானது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.ஜனநாயக நாடுகளில் முக்கிய தூண்களில் ஒன்றாக உள்ள ஊடகம் மதிக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

இதை விடுத்து ஊடகங்களை அச்சுறுத்துவது, அச்சு ஊடகங்களின் பிரதிகளை எரிப்பது, ஊடகவியலாளர்களை மிரட்டி பணிய வைப்பது எத்தரப்பினாலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

தற்போதைய அரசாங்கம் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக சகல தரப்பினரதும் அபிப்பிராயங்களையும் அறிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது. எனவே இவ்வாறான அநீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதை சம்பந்தப்பட்டவர்கள் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 91 ஆவது பிறந்த தின நினைவுப்பேருரை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டப நாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், கௌரவ விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

## சுருக்குவலைத் தொழிலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# மீனவர்கள் கறுப்புத் துணியினால் வாயைக்கட்டி

## முல்லை.நீரியல் வளத்திணைக்களம் முன்பாக போராட்டம்











(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் சுருக்கு வலை மீன்பிடித் தொழிலுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு முன்பாக அமை தியான போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர் போராட்டத்தில் உள்ள மீனவர்கள் கறுப்புத் துணியினால் வாயைக் கட்டி தமது எதிர்ப்பை காட்டியிருந்தனர்.

தொடர்ந்து போராட்டத், தில் ஈடுபட்ட மீனவர்கள் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரியை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து "அமைச்சர் வாக்கு பொய்யா, எம்மை ஏமாற்றி விட்டார், இலஞ்சம் வாங்கி எம்மை அளிக்காதே. தடை செய் தடைசெய்சட்டவிரோததொழிலை முற்றாக தடை செய், கடற்றொழில் அமைச்சரே தங்களது வாக்குறுதி இதுதானா, சுருக்குவலை அனுமதி முல்லை. மீனவர்கள் பட்டினிக்கான அனுமதி" உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு ஊர்வலமாக சென்ற மீனவர்கள் சட்டவிரோத கடற்றொழிலை தடை செய்யக்கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் கடுமையாக மக்கள் விமர்சித்தனர்.

குறித்த இடத்தில் அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா.எதிர்க்கட்சி தலைவர் மற்றும் மீன்பிடி அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கான மகஜர்களை கையளித்திருந்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, குறித்த மீனவ பிரதிநிதிகளை இன்று நண்பகல் 12 மணிக்கு பாராளுமன்ற கட்டடத்தில் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் மீனவ அமைச்சர் ஆகியோரை சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை கொண்டு வந்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி மக்களுக்கு நிரந்தர தீர்வை பெற்று தருவதாகவும் உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள், மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினர். பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதன்போது மகஜரைப் பெற்றுக்கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உரிய அமைச்சுருக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழிலை தடைசெய்யக்கோரி கடந்த மாதம் 2ஆம் திகதி மீனவர்களினால் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ச்சியாக நடைபெற்ற பத்து நாட்கள் போராட்டத்தின் பின்னர் போராட்டக்காரரை சந்தித்த மீன்பிடி அமைச்சர் சட்டவிரோத கடற்றொழிலுக்கு முற்றாக தடைவிதித்துள்ளதாகவும் சுருக்கு வலை கடற்றொழில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சுருக்குவலை மீன்பிடித் தொழிலுக்கான அனுமதி (நீரியல் வள திணைக்களம்) மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

---

# நிவாரண உதவிகளை மத்திய அரசிடமிருந்து பெறவேண்டும்

## விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் பகுதியில் மீன்கள் இறந்து கரையொதுங்கியமையையடுத்து தற்போது தொழில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கான நிவாரண உதவிகளை மத்திய அரசிடம் இருந்தே பெற வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரியப்படுத்தி வருவதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வரட்சி காரணமாக நந்திக்கடல் பகுதியில் பெருந்தொகையான மீன்கள் இறந்து கரையொதுங்கியமையால் குறித்த கடற்பகுதியில் தொழில் செய்து வந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத் தொழில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் இவ்வாறான பாதிப்பு ஏற்பட்டமையால் தமது தொழில்கள் பாதிக்கப்பட்டன என்றும் இவ்வாறு பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுத்தருமாறும் இதற்கு மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசனைத் தொடர்பு கொண்டு வினவிய போது, நந்திக்கடல் பகுதியில் மீன்கள் இறப்பது என்பது தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது.

கடந்த மூன்று வருடங்களாக வரட்சி ஏற்படுவதும் ஒரு காரணம். இவ்வாறான பிரச்சினையை தீர்ப்பதற்கு நந்திக்கடலுக்குகுறுக்கஅணை ஒன்றை அமைப்பதன் மூலம் இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ளலாம். நந்திக்கடலை நம்பி வாழ்ந்து இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி என்பது நாங்கள் மத்திய அரசிடம் இருந்து தான் பெற வேண்டியுள்ளது.

எனவே நிச்சயமாக இது சம்பந்தப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் நாங்கள் தெரியப்படுத்துவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

---

# முல்லைத்தீவில் புதிய நீதிமன்ற கட்டுமானப்பணிகள் துரிதகதியில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய நீதிமன்றத்திற்கான கட்டுமானப்பணிகள் தொடர்ந்து துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதிகளை அமைக்கும் நோக்கில் கடந்தாண்டு அதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 400 மில்லியன் ரூபா செலவில் இதன் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாங்குளம் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மாந்தைகிழக்கு ஒட்டுசுட்டான் பிரதேச எல்லைகளை உள்ளடக்கிய வகையில் நீதிமன்ற கட்டடத்தொகுதி ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் கட்டுமானப்பணிகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (2-315)




---

# சிற்றூர்தி இரு வாகனங்களுடன் மோதுண்டு விபத்து;ஐவர் படுகாயம்





(பரந்தன்)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதிக்கு முன்பாக பண்ணை ஒன்றிற்கு அருகில் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் நடைபெற்றுள்ளது.

முறிகண்டிப் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த சிற்றூர்தி ஒன்று பண்ணைப்பகுதியில் திடீர் என வீதியைக் குறுக்கறுத்த மாடு ஒன்றுடன் மோதுண்டு எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஹன்டர் வாகனம் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயங்களுக்கு உள்ளானவர்களில் மோட்டார் சைக்கிள் சாரதியின் நிலைமையே கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.(2-312)

---

# முல்லை.மாவட்ட செயலகம், நீரியல்வளத் திணைக்களத்திற்கு நேற்று பொலிஸ் பாதுகாப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் ஆகியவற்றிற்கு நேற்று பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

முல்லைத்தீவில் சுருக்கு வலை மீன்பிடித் தொழிலுக்கு தற்காலிகமாக அனு மதி வழங்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு முன்பாக மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



இதனையடுத்தே முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டதோடு மாவட்ட செயலகத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகள் செல்லவும் பொலிஸார் தடைவிதித்தனர். பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் பொலிஸார் அவர்களை உள்ளே செல்லஅனுமதித்தனர் (2-281)

# இ.போ. சபையினர் பணிப்புறக்கணிப்பு



(குருமன்காடு)

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில்பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை போக்குவரத்துச் சபையினர் நேற்றுத் தொடக்கம் முதல் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கீழ் இயங்குவதால் எமக்கு பாதுகாப்பில்லை. தூர சேவைப் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திற்குள் செல்வதற்கு அனுமதி கோரியும் நேற்று முன்தினம் தனியார் பேருந்து சங்க ஊழியர், உரிமையாளரினால் இ.போ.ச நடத்துநர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இப் பணிப்புறக்கணிப் புக்காரணமாக அரச மற்றும் தனியார் ஊழியர்கள் பருவகாலச் சீட்டுடன் வந்தும் கடமைகளுக்கு நேரத்துக் குச் செல்ல முடியாத நிலையில் காத்திருந்தனர்.

புதிய பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேருந் துகள் அதிகளவில் சேவை யில் ஈடுபட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. இதேவேளை வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக இ.போ. சபை - தனியார் பேருந்து சாரதி, நடத்துநர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் 5.10 மணியளவில்ஏற்பட்ட முறுகல் காரணமாக ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.(2-250-281)

# பாதுகாப்பான புகையிரதக் கடவைகளை அமைத்து நிரந்தரமாக கடவைக்காப்பாளர்களை நியமியுங்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.வலியுறுத்து



(குருமன்காடு)

வடக்கின் புகையிரதக் கடவைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் விபத்துக்களுக்கு புகையிரதத் திணைக்களத்தின் அசமந்தமே காரணம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை, பன்றிக்கெய்த குளம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடந்து சென்ற கார் ஒன்றின் மீது யாழில் இருந்து பயணித்த புகையிரதம் மோதியதில் நான்கு பெண்கள் சம்பவ இடத்திலேயே மரணமடைந்திருந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர். இச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் அண்மைக்காலமாக புகையிரத விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அதிலும் குறிப்பாக வவுனியா ஓமந்தைக்கும், கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட பகுதிகளிலுள்ள புகையிரதக் கடவைகளில் பல விபத்துக்கள் இடம்பெற்று உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இப் பகுதிகளில் உள்ள பல புகையிரதக் கடவைகள் பாதுகாப்பற்றக் கடவைகளாக இருப்பதுடன், கடவைக் காப்பாளர்கள் நியமிக்கப் படவில்லை. இதன் ஊடாக பயணிப்போர் புகையிரதத்தில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகின்றனர்.

தற்போது பன்றிக்கெய்த குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்துக்கூட பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் பயணித்த காரே விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த பகுதி ஊடாக பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் தினமும் பல நூற்றுக்கணக்கில் பயணிக்கும் நிலையில் குறித்த பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை ஒன்றை அமைக்குமாறு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைவிட்டு வந்ததுடன், அதனை நானும் புகையிரதத் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தேன்.

மாவட்டத்தில் இடம்பெற்ற பல ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பாதுகாப்பான புகையிரதக் கடவைகள் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்திருந்தேன்.

குறிப்பாக கடந்த 3ஆம்திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குறித்த பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், எந்தவித நடவடிக்கையும்புகையிரதத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாத நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான விபத்துக்களை இனிவரும் காலங்களில் தடுக்கும் வகையில் புகையிரதத் திணைக்களம் பாதுகாப்பான புகையிரதக் கடவைகளை அமைப்பதுடன், புகையிரதக் கடவைகளுக்கு நிரந்தரமாகக் கடவைக் காப்பாளர்களையும் நியமிக்க வேண்டும்.

அத்துடன், ஏ-9 வீதியிலும்அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்து உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸ் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் புதிய திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்தி அநாவசியமான உயிரிழப்புக்களைத் தடுக்கவேண்டும்எனவும் தெரிவித்தார். (2-250)

# தமிழரின் பாரம்பரிய தற்காப்புக்கலைப்பயிற்சி படையினருக்கு கிளிநொச்சியில் ஆரம்பிப்பு

(பரந்தன்)

தமிழரின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் தற்காப்பு "அன்கம்பொர" கலையைப் படையினருக்கு வழங்கும் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள நெலும்பியசவில் குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் கீழ் உள்ள 100 பேர் குறித்த மூன்று மாத பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

தற்காலங்களில் சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய கலைகள் அழிவடைந்து வரும் நிலையில் இவ்வாறான கலைகளை பயிற்சிகள் மூலம் ஊக்குவித்து எமது பாரம்பரியங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரினதுமாகும்.

குறித்த பயிற்சி வகுப்பானது 3 மாதங்கள் முன்னெடுக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன. நிகழ்வில் கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவன உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தற்காப்பு கலை தொடர்பான காட்சிப்படுத்தலும் அரங்கை அலங்கரித்தது. (2-312)

# ஆலயங்களுக்கு காசோலை, சீமெந்து பக்கெற்றுகள் வழங்கல்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரனின் இவ்வாண்டின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியொதுக்கீட்டின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆலயங்களுக்கு காசோலை, சீமெந்து பக்கெற்றுக்கள் என்பன வழங்கும் நிகழ்வு அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

ஆலய திருத்த வேலைகளுக்கென40 ஆயி ரம் ரூபாய் பெறுமதியான சீமெந்து பக்கெற்றுக்கள் கரிப்பட்டமுறிப்பு ஸ்ரீமுருகன் ஆலயத்துக்கும், ஆலய மண்டப திருத்த வேலைக்கென பெரிய சாளம்பன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கும். ஆலய கட்டட வேலைக்கென முத்தையன்கட்டு கனகரத்தினபுரம் நம்பிக்கை விநாயகர் ஆலயத்துக்கும் தலா 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன் கலந்துகொண்டு காசோலையை வழங்கி வைத்தார். (2-281)




# அக்கராயன்குளம் வான்பகுதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குக!

## விவசாயிகள் கோரிக்கை



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளத்தின் சேதமடைந்து காணப்படும் வான் பகுதியை உரியமுறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன்குளம் மீள் குடியமர்வின் பின்னர் புனரமைக்கப்பட்ட போதும் அதன் வான்பகுதி உரியமுறையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன் வான் பகுதியில் காணப்படும் வெடிப்புக்களின் மூலம் நீர்க்கசிவு ஏற்படுவதாகவும் இதனை புனரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது வான்பகுதி புனரமைக்கப்படுகின்ற போதும் அவை உரியமுறையில் புனரமைக்கப்படவில்லை என்றும் இதனை உரிய முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி அக்கராயன்குளத்திற்குட்பட்ட சுமார் 3 ஆயிரத்து 417 ஏக்கர் நிலப்பரப்பில் 1819 விவசாயிகள் வருடாந்தம் காலபோக பயிர்ச்செய்கையையும் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோக செய்கைகளையும் மேற்கொள்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (2-312)

# தீயிட்டு எரிக்கப்பட்ட மீனவர்களின் வாடிகள் மீளமைத்து கையளிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றில் தீயிட்டு எரிக்கப்பட்ட தமிழ் மீனவர்களின் ஐந்து வாடிகள் மீளமைத்து கையளிக்கப்பட்டுள்ளன.

நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளால் தீயிட்டு எரிக்கப்பட்ட தமிழ் மீனவர்களின் ஐந்து வாடிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் அணியினரின் ஒழுங்கமைப்பில், தியாகி அறக்கொடை நிறுவனம், மண்வாசனை அமைப்பு மற்றும் மனித நேயச் செயற்பட்டாளர்களின் உதவியுடன் மீளமைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் கையளிக்கப் பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் மற்றும் புதுக்குடியிருப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்தம்பிஐயா, முல்லை மாவட்டச் செயலாளரும், இளைஞர் அணியின் மத்திய குழு உறுப்பினருமான தி.கிந்துஜன், முல்லை, மாவட்ட அமைப்பாளர், இளைஞர் அணிச்செயற்பாட்டாளர் விஸ்ணு மற்றும் கட்சியின் முல்லை. மாவட்டச் செயற்பாட்டாளர்கள் ஏனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2)

# கெங்காதரன் குடியிருப்பில் அமைக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் செயலிழப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் 4.5 மில்லியன் ரூபா செலவில் கரைச்சிப் பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் இரண்டு மாதங்களிலேயே செயலிழந்து விட்டதாகவும் தற்போது குடிநீருக்கு தாங்கள் தவிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் வாழ்ந்து வரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பெற்றுக்கொள்வதில் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் 4.5 மில்லியன் ரூபா செலவில் கரைச்சிப் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சரினால் கடந்தாண்டு மே மாதம் 27 ஆம் திகதி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்ட மேற்படி குடிநீர் விநியோகத்திட்டம் இரண்டு மாதங்களில் செயலிழந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராமத்தின் தேவை கருதியும் தாங்கள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாகவும் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டம் செயலிழந்துள்ளமையால் தாங்கள் தொடர்ந்தும் குடிநீர் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2018 - 17.10.2018



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் தனாதிபதி புதனோடு இணைந்து தன ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். செய்யும் தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். 'வரவேண்டிய பாக்கிகள் வசூலாகாமல் இழுத்தடிக்கிறதே' என்று நினைத்தவர்கள், இப்பொழுது முயற்சி செய்யாமலேயே முடங்கிக் கிடந்த தொகை வரப் போகிறது. தொழிலில் ஏற்பட்ட தொய்வு நிலை மாறி, தொடர் வெற்றியைப் பெறப் போகிறீர்கள். இதுபோன்ற காலங்களில் உங்கள் தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் தெய்வ பலம் கூடுதலாகக் கிடைக்கும்.

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகி உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். யோககாரகன் உச்சம் பெறும்பொழுது இதுவரை இருந்த தடைகள் தானாக விலகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த திருமணம் உள்ளிட்ட சுப காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சவால்களையே நாளும் சந்தித்து வந்த நீங்கள் இனி சந்தோசத்தையே சந்திக்கப் போகிறீர்கள்.

வரப்போகும் குருப்பெயர்ச்சி அர்த்தாஷ்டம குருவாக வருவதால், ஆரோக்கியத் தொல்லையைக் கொடுக்குமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சுகாதிபதி செவ்வாய் உச்சம் பெற்று இருப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

### துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் உச்சம் பெற்றிருக்கும் புதன், ஒக்டோபர் 2 ஆம் திகதி துலாம் இராசிக்கு வருகிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத - சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். அதே நேரத்தில் அஸ்தமனமாகி வலிமையிழந்தும் இருக்கிறார். ஒக்டோபர் 4 ஆம் திகதி புதன் வலிமை அடைகிறார். இந்தப் பொன்னான புதனின் பெயர்ச்சியால் பூமி யோகமும் பொருளாதார விருத்தியும் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். மாமன், மைத்துனர்கள் மனமுவந்து ஒத்துழைப்பார்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். ஆன்மிகப் பணிக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். பயணங்களால் பலன் உண்டு. தொழிலில் இருந்த குறுக்கீடு அகலும். அரசாங்க ஆதரவும் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து, பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வழிவகுத்துக் கொடுப்பர். அதிக முதலீடு செய்து கூடுதல் இலாபத்தை வரவழைத்துக் கொள்வீர்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமான பணியாளர்கள் வந்திணைவர். வீடு கட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டுமென்று முயற்சி செய்து அதில் தாமதம் ஏற்பட்டவர்கள், இப்பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறி இனிமை காண இயலும்.




தாயின் உடல்நலம் சீராகும். பெற்றோர்களின் பாசமழையில் நனைவீர்கள். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உயர்கல்வியில் சேர நினைப்பவர்களுக்கு தேர்ந்தெடுத்த துறை கிடைக்கும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். பல நாட்களாக நடைபெறாத பாகப்பிரிவினை, இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். உடன்பிறப்புகளோடு இருந்த கருத்து வேறுபாடு அகலும். இதுபோன்ற காலங்களில் சுய ஜாதகத்திற்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் குருவிற்குரிய சிறப்பு வழிபாடுகளையும் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது.

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

ஒக்டோபர் 11 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்கிரன் வக்கிரம் பெறுகிறார். சகாய ஸ்தானாதிபதி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சில காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படும்.

குறிப்பாக தொழிலில் உள்ள பங்குதாரர்கள் விலகுவது அல்லது பாக்கிகள் வசூலாகாமல் இருப்பது போன்றவை நிகழும். பிறருக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் சிக்கல்கள் உருவாகலாம். பெண் வழிப்பிரச்சினைகள் தலைதூக்கும். இக்காலத்தில் பிரதோஷ வழிபாட்டின் மூலம் நன்மைகளை வர வழைத்துக் கொள்ளலாம்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டையும் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் நீங்கள் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தளராத முயற்சியில் இருந்த தடைகள் அகலும். கணவன்-மனைவிக்கு இடையே ஒற்றுமை பலப்படும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். நகை நட்டுக்கள் வாங்கும் யோகம் உண்டு. ஆடை, ஆபரணம் வாங்கிக் குவிப்பீர்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு நல்ல பலன்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும் குமரக்கடவுள் வழிபாடும் நலங்களையும் வளங்களையும் வழங்கும்.

## இராஜ யோகம் வருகின்றது!

### குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 4 ஆம் திகதி விருச்சிக இராசிக்குக் குரு செல்கிறார். இதுவரை சகாய ஸ்தானத்தில் இருந்த குரு பகவான், சுக ஸ்தானத்திற்குச் செல்வது யோகம் தான். அப்போது குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால்,

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவர் உச்சம் பெற்றிருந்தாலும் அஸ்தமனமாகவும் இருக்கிறார். அவரோடு விரயாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் விரயங்கள் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். அவற்றைச் சுபவிரயமாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கலாம். கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான நேரமிது. கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் உங்களுக்கு இப்பொழுது வேலைப்பளு இன்னும் அதிகரிக்கலாம். ஆனால் உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

வாக்கு ஸ்தானத்தில் சுக்கிரன் பலம் பெற்றிருந்தாலும் அவரோடு பகை கிரகமான குரு பகவான் இணைந்திருக்கிறார். எனவே சிறுசிறு விடயத்திற்கு கூட கோபப்படும் சூழ்நிலை உருவாகும். வீண் விவாதங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. உடனிருப்பவர்களின் குறைகளை பெரிதுபடுத்த வேண்டாம். கையெழுத்திடும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கவனமுடன் செயற்படுங்கள்.

உங்கள் இராசிக்கு நான்காம் இடத்தில் சனி இருப்பதால், அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் உள்ளது. ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்படலாம். நோய்க்கானஅறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. தொழில் பங்குதாரர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். எனவே புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றிச் சிந்திப்பீர்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் செல்லும் பொழுதும் கவனமுடன் இருங்கள். இது போன்ற காலங்களில் சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### துலாம் இராசியில் புதன்

கன்னி இராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் புதன், ஒக்டோபர் 2 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்கிறார். அதே நேரத்தில் அஸ்தமனத்திலும் இருக்கிறார். ஒக்டோபர் 4 ஆம் திகதி புதன் பலம்பெற்று சஞ்சரிக்கப் போவதால், பணவரவு திருப்தி கரமாக இருக்கும். எண்ணங்கள் ஈடேறும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். புதிய வியாபாரத் தொடக்கங்களுக்கான அறிகுறி தென்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். மனக் குழப்பம்அகலும். பிறகு செய்யலாம் என்று தள்ளி வைத்த காரியங்களை, ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள். அதிகாரிகளால் ஏற்பட்ட பகை மாறும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் குரு பகவான், ஒக்டோபர் 4 ஆம் திகதிக்குப் பிறகு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே எல்லாவிதங்களிலும் உங்களுக்குச் சகாயங்கள் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை உண்டாகும். சொந்தங்கள் உங்கள் நல்ல குணத்தை உணர்ந்து, உங்களோடு வந்து இணைவார்கள். தாய் ஸ்தானத்திற்கும் களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியான குரு, சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தாய் வழி ஆதரவு கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியிலும் வளர்ச்சி கூடும். உதிரி வருமானங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.




## கல்யாண வாய்ப்புகள் கைகூடும்!

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

ஒக்டோபர் 11 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்கிரன் வக்கிரம் பெறுகிறார். வக்கிரம் பெற்றாலும் கூட துலாம் இராசி அவருக்குச் சொந்த வீடு என்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. ஒரு சில காரியங்களில் தடைகள் ஏற்பட்டாலும் அவை தானாக விலகி விடும். வங்கிக் கடன் அல்லது வள்ளல்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அதில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். குடும்பத்திலுள்ள பெரியவர்களை திருப்திப்படுத்த வேண்டிய நேரமிது. அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், அவர்கள் கூறும் அறிவுரைகளை கேட்டு நடக்கும் சூழல் உருவாகும். தங்கம், வெள்ளி போன்ற ஆபரண சேர்க்கை உண்டு. பூமி சார்ந்த முதலீடுகளில் அவசரம் காட்ட வேண்டாம். இடம் வாங்கும் பொழுது ஆராய்ந்து பார்த்து வாங்குவது நல்லது. இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானையும் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவையும் வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். வேலைப்பளுவும் கூடுதலாக இருக்கும். கிரக நிலைகள் சாதகமாக இருந்தாலும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. பணப் புழக்கம் எதிர் பார்த்தபடி அமையும். அதே நேரம் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு ஒற்றுமை பலப்படும். கணவன்-மனைவி இடையே கனிவும் பாசமும் கூடும். சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கூடுதலாக இருக்கும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகளை பேசி முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு குருப்பெயர்ச்சியின் விளைவாக சாதகமான நிலை உருவாகும். சக பணியாளர்களின் தொல்லை அகலும். மேலதிகாரிகளின் ஆதரவோடு சலுகைகளும் கிடைக்கும். பெருமாள் வழிபாடும் துர்க்கை வழிபாடும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்.

(தொடரும்)

# எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்திருந்தால் முரண்பாடுகளுக்கு தீர்வு கிடைத்திருக்கும்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(கண்டி)

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்திருந்தால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில். நீடிக்கின்ற முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்குமென கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள், அவர் பிறந்த ஊரான கண்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு எந்த விதமான தயக்கமும் இல்லாமல் எம்.ஜி.ஆர். உதவி செய்துள்ளார். இலங்கை மக்களை தன் மக்கள் என உரிமையோடு அழைப்பார்.

எம்.ஜி.ஆர்.ஒரு சிறந்த நடிகர், அரசியல்வாதி, நல்ல மனிதனும் ஆவார். அது மட்டுமல்லாமல் அவர் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியாகச் செயற்பட்ட மனிதன் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏழைகளுக்கு அவர் இல்லை என்று கூறாமல் உதவி செய்தவர். என்றுமே அவர் ஏழை மக்களை கைவிட்டதில்லை. அத்துடன் சிறந்த நிர்வாகத்திறன் கொண்டவர் மட்டுமல்லர், தமிழகத்தில் சிறந்த ஆட்சியை நடத்தியவர்" என இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியை கொல்லச் சதி நாலக சில்வா இடமாற்றம்!

(கொழும்பு)

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் நாலக சில்வாவை தற்காலிகமாக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு இடமாற்றம் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றமானது பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் உத்தரவுக்கமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ருவான் குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக்கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டியதாக நாலக சில்வாவின் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது. இந்தக் குற்றச் சாட்டினை நாமல் குமார முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தீவக வலயத்தில் அமைந்துள்ள வகை II, வகை III பாடசாலைகளுக்கான அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் வகை-II, யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் வகை-II, யா/அனலைதீவு தெற்கு அ.மி.த.க. பாடசாலை வகை-III, யா/நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க. வித்தி வகை-III, யா/நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தி வகை-III, யா/பாலாவோடை இ.த.க. வித்தி வகை-III போன்றனவாகும்.

மேற்படி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

- விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டருத்தல் வேண்டும்.
- வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர்சேவை வகுப்பு 2 இனைச் சேந்தவர்களது விண்ணப்பம் கிடைக்கப் பெறாத பட்சத்தில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும் என தீவகம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோ அறிவித்துள்ளார். (இ)

# "முன்னே வருவாய் முதல்வா" வல்லிபுரத்தில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சி யின் ஏற்பாட்டில் வல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கில் இடம் பெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று இரவு 8 மணியளவில் காப்பாளரும் ஓய்வு நிலை அரசாங்க அதிபருமான வே. விஸ் வலிங்கம் தலை மையில் கவிஞர் பெரிய ஐங்கரன் "முன்னே வரு வாய் முதல்வா" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவாற் றுவார். (இ)



மண்டான் சனசமூக நிலையத்தின் உறுப்பினர்களும் பொதுமக்களும் இணைந்து நேற்று முன்தினம் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் குழந்தைவேலு ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தங்கவேலு பாலராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி ஓய்வுநிலை போதனாசிரியர் வேலாயுத பிள்ளை வெற்றிவேல் வழங்குவார். (இ)

# ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான 3 நாள் ஆங்கில பயிற்சிப்பட்டறை ஆற்றல் (Aatral) அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிப்பட்டறை யானது அனுபவம் வாய்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நிகழ்த்தப்படும்.

அனுமதி இலவசம், மதிய உணவு மற்றும் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இலக்கம் 218 ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஹட்ச்களம் 4 ஆம் மாடியில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 வரை இடம்பெறும். இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள முன் பதிவு அவசியமாகும்.

பதிவுகளுக்கு: www.aatral.org/events என்ற இணைய முகவரிக்கு செல்லவும். அல்லது 071 985 9271 என்ற எண்ணுக்கு அழைக்கவும்.

அனைத்து மாணவர்களும் இந்த அரிய வாய்ப்பை தவறாது பயன்படுத்துமாறு ஆற்றல் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் தேசமானிய தேசகீர்த்தி போன்ற விருதுகளைப் பெற்றுக் கொண்ட வரும் யாழ். பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவில் திட்டமிடல் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டவரும் முதுகலைமாணி பொது நிர்வாக பட்டப்பின் படிப்பை மேற்கொண்டு வரும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் பழைய மாணவியுமான யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை நிரந்தர முகவரியாகவும் மாதகல் நுணசை வீதியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி.ஷிறோமி ஹமித்ராஜன் (ஜான்) யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக 2018.09.06 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (இ)



சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளாகத்தில் திருவள்ளுவர் சிலை மீண்டும் நிறுவப்பட்டுள்ளது. தமிழறிஞர் அ.பொ.செல்லையாவால் கடந்த 1982 இல் சாவகச்சேரி நகரசபை முன்றலில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது. இதேவேளை 2015 ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலை உடைக்கப்பட்டு நகர சபை வளவினுள் ஓரமாகப் பொறுப்பற்ற நிலையில் போடப்பட்டிருந்தது. மேற்படி சிலையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி கல்லூரி வளாகத்தினுள் நிறுவ நடவடிக்கைகளை எடுத்து கடந்த 2 ஆம் திகதி மீண்டும் நிறுவினார். ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். நினைவுக் கல்லை மருத்துவர் சு.சி.அருளானந்தம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

# பாரதம்

## 7 பேரை விடுவிப்பதற்கு எதிரான வழக்கை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்தது உச்ச நீதிமன்றம்



(டில்லி)
பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணையை உச்ச நீதிமன்றம் மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது தொடர்பாக தமிழக ஆளுநருக்கு முழு அதிகாரம் இருப்பதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன் அடிப்படையில், 7 பேரையும் விடுதலை செய்யவேண்டும் என தமிழக அரசும் பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரை தொடர்பாக ஆளுநர் இன்னும் முடிவு எடுக்கவில்லை.

இதற்கிடையே, 7 பேர் விடுதலை தொடர்பாக 2014ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தை எதிர்த்து, அமெரிக்கை நாராயணன், அப்பாஸ், ஜான் ஜோசப், சாமுவேல் திரவியம் மற்றும் ராம சுகந்தன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு 4 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் சார்பில் ஆஜராகவேண்டிய வழக்கறிஞர்கள் ஆஜராகவில்லை. எனவே விசாரணையை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைப்பதாக உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

மேலும், 7 பேரை விடுவிப்பது தொடர்பாக தமிழக அமைச்சரவையின் தற்போதைய தீர்மானம் மற்றும் கூடுதல் ஆவணங்களை சேர்த்து புதிய மனுக்களை மூன்று வாரங்களுக்குப் பிறகு தாக்கல் செய்யும்படி மனுதாரர்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (7)

## எச்.ராஜாவை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்



### திருமாவளவன் வலியுறுத்து

(சென்னை)
பொலிஸாரையும் உயர் நீதிமன்றத்தையும் பொது மக்கள் முன்னிலையில் அநாகரிகமாக பேசிய எச். ராஜாவை குண்டர் சட்டத்தில் கைது செய்யக்கோரி திருமாவளவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் கூறியதாவது,

மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்கிற அகந்தை அவருடைய நடவடிக்கைகளில் மேலோங்கி நிற்கிறது.

பெரியாரை, அண்ணாவை, கலைஞரை என திராவிட இயக்க தலைவர்களையும் இடதுசாரி உள்ளிட்ட ஜனநாயக சக்திகளையும் மிக கடுமையாக, மூர்க்கமாக விமர்சித்து வருகிறார்.

தற்போது திருமயம் அருகே பொலிஸாரையும் உயர்நீதிமன்றத்தையும் பொதுமக்கள் முன்னிலையில் அநாகரிகமாக பேசி இருக்கிறார்.

சிறைத்துறைக்கும், பொலிஸாருக்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் சிறையில் நடக்கும் ஊழல் முறைகேடுகளை சொல்ல பொலிஸாருக்கு வெட்கம் இல்லையா? என்று கேட்கிறார்.

மனோகரன் என்கிற இந்து பெயர் கொண்ட அதிகாரியை கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களின் கைக்கூலி என்று பேசுகிறார்.

உயர்நீதிமன்றம் கூட்டம் போட தடை விதித்து இருக்கிறது என்று சொன்ன போதும் உயர்நீதிமன்றத்தை கொச்சையாக தடை விதிக்கப்பட்ட இடத்திலேயே கூட்டம் நடத்துவேன் என்று ஆவேசமாக பேசியிருக்கிறார். என்ன பேசுகிறோம் என்று தெரியாத அளவிற்கு முகம் சுழிக்கும் வகையில் அவர் பேசியிருப்பது வேதனை அளிக்கிறது.

மத்தியில் ஆட்சி நடத்துகிறோம் என்கிற மமதையும், தமிழக அரசு ஒரு கையாலாகாத அரசு என்கிற அலட்சியமும்தான் அவருடைய இந்த போக்கிற்கு காரணங்களாக உள்ளன.

அரசு இனியும் மெத்தனம் காட்டினால் மதவாத சக்திகள் தமிழகத்தின் அமைதியை சீர்குலைப்பார்கள் என்பதை தமிழக அரசுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

## வங்கிக் கடன் விவகாரம்

## விஜய் மல்லையாவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

(சென்னை)
வங்கிக் கடன் மோசடி குற்றச்சாட்டில் சிக்கியுள்ள விஜய் மல்லையாவிற்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 வங்கிகளில் இந்திய மதிப்பில் சுமார் 6 ஆயிரம் கோடி கடனாகப் பெற்று, அதனைத் திருப்பிச் செலுத்தாது மோசடி செய்ததாக பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையா மீது குற்றம் சுமத்தபட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, இங்கிலாந்தில் வசித்துவரும்விஜய்மல்லையா மீது, ஒரு மாதத்திற்குள் சி.பி.ஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம்என்றுகூறப்படுகின்றது.

மேலும் அவர் பெற்றுக் கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தும் தகுதியும், பணமும் இருந்த போதிலும், அவரும் அவரது நிர்வாகக் குழுவினரும், கடனைத் திருப்பிச் செலுத்தாது வங்கியை ஏமாற்றி வருவதாக சி.பி.ஐ. குற்றம் சுமத்துகின்றது.

சி.பி.ஐ. தாக்கல் செய்யவுள்ள குற்றப்பத்திரிகையில், வங்கி அதிகாரிகளின் பெயர்களும் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (7)

## பிலிப்பைன்ஸில்

## பலி எண்ணிக்

(மணிலா)
பிலிப்பைன்ஸ் நாட்டில் மொங்குட் என்ற புயல் கடுமையாக தாக்கியதில் இரண்டு மீட்புப்படை வீரர்கள் உட்பட 70 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ககாயன் மாகாணத்திலுள்ள லூஷான் தீவில் 'மொங்குட்' எனப் பெயரிடப்பட்ட புயல் கடந்த சனிக்கிழமை கடுமையாக தாக்கியது. அங்கு பக்காயோ என்ற இடத்தில் கரையை கடந்தது.



## தொலைபேசிகளை அ

## பெற்றோர்களுக்கு எதிரா

(பெர்லின்)
ஜேர்மனியின் ஹம்பர்க் நகரில் பெற்றோர்கள் தொலைபேசிகளே கதி என இருந்ததால் 7 வயதே நிரம்பிய குழந்தைகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜேர்மனி நாட்டில் அமைந்துள்ள ஹம்பர்க் என்ற நகரில் ஏழு வயது நிரம்பிய குழந்தைகள் தங்களது பெற்றோர்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## ராஜீவ் கொலை வ

## உயிரிழந்தோர் குடும்பங்க மதிப்பளிக்க வேண்டும் -



(டில்லி)
முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றுள்ள ஏழுபேரையும் விடுதலை செய்வது தொடர்பான விவகாரத்தில், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரின் குடும்பங்கள் தவிர, குண்டு தாக்குதலின் போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் முன்வைக்கும் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென, தமிழகத்தின் பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

குறித்த ஏழு பேரையும் விடுதலை செய்யக் கோரி தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியும், இதுவரை ஆளுநர் மௌனம் காப்பது ஏன் என்ற, ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் வழாங்கி

இத
அவர்,
“ராஜீ
14 குடும்
இழந்து
உறவுக
நீதிமன்
ளனர்.
என
சிறையி
மின்றி,
களை
தண்ட
குடும்பா
டும். அ
ஆக
தில் கொ
ஆளுநர்
பா.ஜ.க
ளுக்கு
பதே" எ
மேலும்

# வெளிநாடு

## ...ில் மொங்குட் புயலால் ...க்கை 70 ஆக உயர்வு



மணிக்கு 305 கி.மீ.வேகத்தில் பலத்த காற்று வீசியதால் அந்நாட்டின் பாகுபோ நகரம் பலத்த சேதத்தை சந்தித்துள்ளது. மீட்புப் பணிகளை பிலிப்பைன்ஸ் அரசு முடுக்கிவிட்டுள்ளது.

அதில் 2 மீட்புப்படை வீரர்கள் பலியாகினர். இவர்கள் தவிர பலர் உயிரிழந்துள்ளனர்.

நிலச்சரிவு மற்றும் மழை வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது. (7)

## மியன்மாரில் சிறையை உடைத்து 41 கைதிகள் தப்பி ஓட்டம்

(யாங்கூன்)

மியன்மாரில் நேற்று முன்தினம் காலை சிறைக் கைதிகள் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியதால் சிறையை உடைத்து 41 கைதிகள் தப்பினர்.

மியன்மாரில் ஹபா-அன் என்ற இடத்தில் சிறைச்சாலை உள்ளது. அங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று காலை அங்கு அடைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகள் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியது.

இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. அதை பயன்படுத்தி கொண்ட கைதிகள் சிறை வளாகத்தை உடைத்துக் கொண்டு வெளியேறினர். அப்போது அவர்களை தடுத்த சிறை அதிகாரியை பயங்கரமாக தாக்கினர். அதில் அவர் காயம் அடைந்தார்.

பின்னர் கிழக்கு கரோன் மாகாணத்தில் இருந்து சிறைக்கு வந்த லொறியை மடக்கி அதில் ஏறி 41 கைதிகள் தப்பினர். அதையடுத்து கைதிகளை தேடும் பணி நடந்தது.

அவர்களில் 3 பேர் மட்டுமே பிடிபட்டுள்ளனர். எஞ்சிய கைதிகளை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பக்கத்து கிராமங்களில் புதிய நபர்களின் நடமாட்டம் காணப்பட்டதால் தகவல் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (7)

## எதியோப்பியா-எரித்திரியா நாடுகள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்து



(அடிஸ் அபாபா)

எதியோப்பியா-எரித்திரியா நாடுகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க சமாதான ஒப்பந்தமொன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்நாயகம்அன்டோனியோ குட்றேரஸின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

எதியோப்பியா பிரதமர் அபி அஹ்மட், எரித்திரியா ஜனாதிபதி இசையாஸ் அஃப்வாகி ஆகிய ஆபிரிக்க தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற குறித்த இரண்டாவது சமாதான ஒப்பந்தம், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சவுதி அரேபியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.


கடந்த 1998ஆம் ஆண்டு ஆரம்பமாகிய இரு நாடுகளின் எல்லைப் பிரச்சினையில் சுமார் 80,000 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, 2000ஆம் ஆண்டு சமாதானத்திற்கான முதல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தை மேற்கொண்டு சுமார் இரு தசாப்தங்கள் பூர்த்தியடையவுள்ளதைத் தொடர்ந்து, இரண்டாவது ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளது.

அண்மையில் இரு நாடுகளின் எல்லைகள் திறக்கப்பட்டு, இரு நாட்டவர்களும் இரு ஆட்சிப்பரப்புகளிலும் நடமாட அனுமதி வழங்கி எல்லை திறப்புவிழா சிறப்பாக இடம் பெற்றது.

எல்லைக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர், எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவின் ஊடாக செங்கடலுக்கான துறைமுகத்தை எரித்திரிய மக்கள் இலகுவில் அடையமுடியுமென்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ... அதிக நேரம் பயன்படுத்தும் ...திராக குழந்தைகள் போராட்டம்



"போராட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். உங்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்புகிறோம். ஏனென்றால் நீங்கள் எப்போதும் கையடக்கத் தொலைபேசிகளை மட்டும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திக்கொண்டு அவர்கள் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தை ஏழு வயது எமில் என்ற சிறுவனின் தலைமையில் தான் நடைபெற்றது என்பது ஆச்சரியப்பட வைக்கிறது. "இந்த போராட்டத்துக்கு பிறகாவது பெற்றோர்கள் தொலைபேசிகளை பார்ப்பதை விட்டு விட்டு குழந்தைகளை பார்ப்பார்கள்" என்று நம்புகிறோம் என எமில் கூறியுள்ளார்.

ஹம்பர்க்கில் எமில் தலைமையில் நடந்துள்ள இந்தப் போராட்டம் அவர்களின் பெற்றோர்களுக்கு மட்டுமல்லாமல் உலகம்முழுவதும்உள்ள பெற்றோர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு எச்சரிக்கை செய்தி எனப்படுகிறது. (7)

## ... வழக்கு ...பங்களுக்கும் ...ம் - தமிழிசை

வழங்கிய போதே மேற்படி கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கூறியுள்ள அவர்,

"ராஜீவ்காந்தி கொலையின் போது 14 குடும்பங்கள் தங்கள் உறவுகளை இழந்துள்ளனர். அவர்களும் தங்கள் உறவுகளின் இழப்பிற்கு நீதி கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

எனவே மனிதாபிமானம் என்பது சிறையில் உள்ள ஏழு பேரில் மட்டுமின்றி, தங்கள் குடும்ப அங்கத்தவர்களை இழந்து வாழ்க்கை முழுதும் தண்டனையை அனுபவிக்கும் 14 குடும்பங்கள் மீதும் இருக்க வேண்டும். அவர்களும் தமிழர்களே.

ஆகவே எல்லாவற்றையும் மனதில் கொண்டு, சட்டத்திற்கு கட்டுப்பட்டு ஆளுநர் முடிவெடுப்பார். இவ்விடயத்தில் பா.ஜ.கவின் நிலைப்பாடு நிரபராதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே" என தமிழிசை சௌந்தர்ராஜன் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## இஸ்ரேலின் இந்தியத் தூதராக ரோன் மால்கா நியமனம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அந்நாட்டுக்கான புதிய இந்திய தூதராக டாக்டர் ரோன் மால்காவை நியமனம் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இஸ்ரேல் நாட்டுக்கான இந்திய தூதராக இருந்து வருபவர் டேனியல் கார்மன். இவரது பதவிக்காலம் ஒகஸ்ட் மாதத்துடன் நிறைவடைந்தது.

இதையடுத்து புதிய இந்திய தூதரை நியமிக்கும் பணிகளில் பிரதமர் நெதன்யாகு ஈடுபட்டு வந்தார்.

அதன்படி சட்ட கல்லூரியின் மூத்த பேராசிரியரும் வங்கி துறையில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவருமான டாக்டர் ரோன் மால்கா என்பவரை அந்நாட்டுக்கான இந்திய தூதராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்திய அரசின் ஒப்புதலுக்கு காத்திருக்கிறோம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## ஆப்கானில் தலிபான்கள் தாக்குதல்! பாதுகாப்புப்படைவீரர்கள் 10 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படையினரின் முகாம்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 வீரர்கள் மரணம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அரசுக்கு எதிராக போரிட்டு வரும் தலிபான் பயங்கரவாத அமைப்பு, கைப்பற்றியுள்ள சில பகுதிகளையும் தாண்டி அதன் எல்லையை விரிவுபடுத்த பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

அதன்படி நேற்றுக்காலை பட்கிஸ் மாகாணத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தங்கி இருக்கும் முகாம்கள் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.



சற்றும் எதிர்பாராத தாக்குதலையும் சமாளித்து எதிர்த் தாக்குதல் நடத்திய பொலிஸார் 22 பயங்கரவாதிகளை சுட்டு வீழ்த்தினர்.

மேலும், 16 பயங்கரவாதிகள் காயங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சண்டையில் 10 பாதுகாப்புப் படை அதிகாரிகள் வீர மரணம் அடைந்துள்ளனர். (7)

## வயிற்றுப் பிழைப்புக்காக

# பௌத்த மதத்தை சிதைக்கும் பின்னணியில் மகா சங்கத்தினர்

## மல்வத்து பீட போசகர் காட்டம்

(கொழும்பு)

**பௌத்த மதத்தை சிதைக்கும் நடவடிக்கைகளின் பின்னணியில் மகாசங்கத்தினர் இருப்பதாக மல்வத்து பீட போசகர் திம்புல் கும்புரே ஸ்ரீ சரணங்கர தேரர் தெரிவித்துள்ளார்.**

ஒத்தபத்தவ ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைத் தெரிவித்தார்.

புத்த பெருமான் பிறந்தது இலங்கையில் எனவும், புத்த பெருமான் பரிநிர்வாணம் அடைந்தது இலங்கையில் எனவும் தெரிவிப்பவர்கள் உருவாகியுள்ளனர். இது போன்று இன்னும் பல விடயங்களையும் அவர்கள் கூறிவருகின்றனர்.

இவ்வாறு பௌத்த மதத்தை சிதைப்பது பொது மக்கள் அல்லவெனவும் பௌத்த பிக்குகளே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதத்தை இவ்வாறு கண்ணெதிரே மாற்றியமைக்க முயற்சிப்பதற்கு பிரதான காரணம் வயிற்றுப் பிழைப்பே எனவும் குறிப்பிட்டுள்ள தேரர், மல்வத்து பீட மகாநாயக்க தேரர் ஒருவர் இதன் பின்னால் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பது குறித்து பல் வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் மல்வத்து பீட போசகர் திம்புல் கும்புரே ஸ்ரீசரணங்கர தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் கொள்கையும் ஐ.தே.கவால் கொலை செய்யப்படுகிறது -பந்துல கவலை

(கொழும்பு)

ஜனாதிபதியை கொலை செய்ய மேற்கொண்ட சதி முயற்சிக்கு மேலதிகமாக ஜனாதிபதியின் கொள்கையை கொலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி சதி செய்து வருகின்றது என கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித் தார்.

ஜனாதிபதி சோளம் விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள் என வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஆனால், சிங்கப்பூர் உடன்படிக்கையின் கீழ் கோழி இறைச்சிக்கான வரி நீக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.



இதற்கு மேலாக பொருளாதார ரீதியிலும் கொலை செய்வதற்கான சதி ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# இந்திய-இலங்கைக் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி நேற்றுடன் நிறைவு



(கொழும்பு)

இந்திய- இலங்கைக் கடற்படைகள் திருகோணமலையில் மேற்கொண்டு வந்த SLINEX-2018 கூட்டுப் பயிற்சி நிறைவடைந்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தக் கூட்டுப் பயிற்சி நேற்று 17ஆம் திகதி நிறைவடைந்தது.

துறைமுகம், கடல் என இரண்டு கட்டங்களாக, நடந்த ஒரு வார கால கூட்டுப் பயிற்சியில் இரண்டு நாடுகளின், 1000 கடற்படையினர் பங்கேற்றனர்.

இலங்கைக் கடற்படையின் சயுரால, சமுத்ர, சுரனிமல ஆகிய போர்க்கப்பல்களும், இந்தியக் கடற்படையின், சுமித்ரா கிர்ச், கோராடிவ் ஆகிய போர்க்கப்பல்களும், இரண்டு டோனியர் விமானங்கள் மற்றும் ஒரு உலங்குவானூர்தியும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றன.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் முதல் முறையாக, இலங்கைக் கடற்படையின் சயுரால போர்க்கப்பலில், இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்தி தரையிறக்கப்பட்டு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (இ-7)

# மத்திய வங்கியிடமுள்ள பொறுப்புக்களை திறைசேரி வசமாக்க தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் வசமுள்ள பல முக்கிய பொறுப்புகளை திறைசேரியின்வசம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015ஆம் ஆண்டு மத்திய வங்கியின் பிணை முறி விநியோக மோசடி இடம்பெற்றதன் பின்னர் ஏற்பட்ட நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த புதிய மாற்றத்தை மேற்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

விசேடமாக அரசாங்கம் கடனை செலுத்துவதற்காக பணத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையும் அதில் உள்ளடங்கியுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உடனுக்குடன் முடிவெடுக்கிறவரா நீங்கள்?

ஆமாம் என்கிறீர்களா? பலே! உங்களது வேகத்திற்கும் Presence of mind க்கும் பாராட்டுக்கள். இனி உங்களுக்கு இருக்கிறது இடி!

சில பேர் ஒரு விடயத்தை சொன்ன மாத்திரத்திலேயே ஊஹும்! இது சரியா வராது! என்று மண்டைப் போடாகப் போட்டு விடுவார்கள். என்ன ஆச்சர்யம்! அதன்படியே அந்த விடயம் சரியாக வராது. சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்! இந்தாளு அப்பவே சொன்னாருங்க சரியா வரா ன்னு. அதே மாதிரி நடந்திருக்குப் பாருங்க! என்பார்கள்.

உடனே நம்மாள் உச்சாணிக் கொம்பில் போய் உட்கார்ந்து கொள்வார். ஒன்றைச் சொன்னதும் பழைய மிதப்பில் "இது பிரமாதமாவரும் பாருங்க" என்பார். அதுவும் அதே மாதிரி நடந்துவிடும். அவ்வளவு தான்! இவருக்குத் தீர்க்கதரிசி என்றும் திரிகால ஞானி என்றும் வ்பயராகிவிடும்.

கடைசியில் ஒரு கவிழ் கவிழ்ப்பார் பாருங்கள்! பல்லுப் படுவாயெல்லாம் காணாமல் போகிற மாதிரி அப்படி ஓர் அடி வாங்குவார்!

Intution ஏன்று சொல்லப்படுகிற உள்ளுணர் வின் அடிப்படையிலோ அனுபவத்தின் அடிப்படையிலோ ஒருவர் சட்சட் என்று முடிவெடுப்பது பெரிய விடயம் தான். ஆனால் சாவகாசம் கிடைக்கிறதென்றால் அதைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவுக்கு வரவேண்டிய அவசியம் தான் என்ன?

இவள் தான் என் மருமகள் என்கிற முடிவுக்கு வந்தார். அப்படி உடனே முடிவு எடுத்ததைப் பற்றிப் பலரிடம் பெருமையும் அடித்துக் கொண்டார். ஆனால் அவர் எடுத்த முடிவு மிகத் தவறானது என்பது காலப்போக்கில் முடிவானது. பெண் சரியான குணக்கேடு! மகனின் மன நிம்மதி பாதிக்கப்பட்டது. இன்று தன் மின்னல் வேக நடவடிக்கைக்காக வருத்தப்படுகிறார்.

ஒரு திருமண விடயத்திலா இப்படி விழுந்தடித்து முடிவெடுப்பது? ஏன் கிடைத்த அவகாசத்தைப்பயன்படுத்திக்கொள்ள வில்லை? யதார்த்தங்களை ஏன் சிந்தித்துப் பார்க்கவில்லை? சில விடயங்களில் நம் கணிப்பீடு சரியாக இருந்தால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்படி நடந்து விடுமா என்ன?

விரைந்து முடிவு எடுத்தோம் என்கிற ஓர் ஆரம்பப் பாராட்டை விட அருமையான முடிவாக எடுத்தார் என்கிற இறுதியான பாராட்டே சிறந்தது.

உடனுக்குடன் முடிவெடுக்கிறவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டால் நல்லது.

**லேனா தமிழ்வாணன்**

# சீனாவின் உதவிபெறும் அண்டை நாடுகளுக்கு இந்திய இராணுவத்தளபதி ராவத் எச்சரிக்கை

(சென்னை)

**சீனாவிடம் இருந்து உதவி பெறும் நாடுகள், எதுவுமே இலவசம் அல்ல என்பதை விரைவில் தெரிந்து கொள்வார்கள் என்று இந்திய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பிபின் ராவத் எச்சரித்துள்ளார். இந்தியாவின் அண்டை நாடுகள் சீனாவுடனான உறவுகளை வளர்த்துக் கொள்வது குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.**



நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் இந்தியாவின் பக்கம் சாய வேண்டும் என்றும், ஏனென்றால் அது தான் புவியியல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்பு நாடுகளின் இராணுவத்தினர் பங்கேற்ற, ஒரு வாரகால, **'Military Exercise 18'** கூட்டுப் பயிற்சியின் நிறைவு நிகழ்வில் உரையாற்றிய போதே இந்திய இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனேயிலுள்ள Aundh இராணுவ மையத்தில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இந்தியாவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சுபாஸ் பாம்ரேயும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் இந்திய இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில்,

"அவர்களிடம் (சீனா) நிதி வாங்கியவர்களின் மனதில், ஒன்றும் இலவசம் அல்ல என்று மனதில் எச்சரிக்கை உள்ளது.

இந்தியாவின் பிரதான பொருளாதாரப் போட்டியாளராக சீனா உள்ளது.

இரண்டு நாடுகளும், தெற்காசியாவின் ஆதிக்கத்துக்காக போட்டியிடுகின்றன.

புவியியல் இந்தியாவை நோக்கிச் சாய்வதை விரும்புகிறது. சீனாவுடனான கூட்டணி கரிசனைகளை ஏற்படுத்தியிருந்தாலும், அது தற்காலிகமானது.

அமெரிக்கா- பாகிஸ்தான் இடையிலான உறவு, இதற்கு மிகச்சிறந்த உதாரணம். அது 70 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போன்று இப்போது இல்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இந்தியாவின் பாதுகாப்பு இணை அமைச்சர் சுபாஸ் பாம்ரே, பிம்ஸ்டெக் பிராந்தியத்தில், தீவிரவாதம் மற்றும் நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான முயற்சிகளுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பை இந்தியா கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும், இந்தியா, இலங்கை மியன்மார், பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நாடுகளின் தலா 30 இராணுவத்தினர் இந்த கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்றனர்.

நேபாளம் கடைசி நேரத்தில் இந்தக் கூட்டுப் பயிற்சியில் இருந்து விலகியது. தாய்லாந்து கண்காணிப்பாளர்களை மாத்திரம் அனுப்பியிருந்தமை, குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழில் தமிழ்த்தூது தனிநாயகம் நினைவரங்கம்



படங்கள்: ஐ.சிவசாந்தன்







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவு அரங்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு தனிநாயகம் அடிகள் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தல், மலர் வணக்கம் செய்தலுடன் ஆரம்பமாகியது. யாழ். பிரதான வீதியில் தண்ணீர் தாங்கியின் முன்பாக அமைந்துள்ள அடிகளாரின் உருவச் சிலைக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து அருட்தந்தையர்கள், தமிழ்ச் சங்கத்தினர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் யாழ். மாநகர ஆணையாளர் , பிரதி ஆணையாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் மலர் வணக்கம் செலுத்தினர்.

கலைத்தூது கலையகத்தில் தொடர்ந்து நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் சி.சிவஸ்கந்தஸ்ரீ ஆற்றினார். தனிநாயகம் அடிகளார் ஆய்வு மைய பணிப்பாளர் அருட்கலாநிதி அ.பி.ெ ஜயசேகரம் அடிகளார் ஆசியுரை வழங்கினார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச.லலீசன் தொடக்கவுரையை ஆற்றினார்.

'தமிழ் அடையாள உருவாக்கம் - திருவள்ளுவரை முன்னிறுத்தி...' என்ற பொருளில் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை இடம் பெற்றது. இதனைப் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் வழங்கினார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்.யுவதிகளிடையே முன்னெடுத்த விவாதச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய கவிஞர் புதுவை இரத்தினதுரை அணியும் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சுவாமி விபுலாநந்தர் அணியும் இதில் சொற்சமர் ஆடின.

இருபத்தொராம் நூற்றாண்டு தமிழை உறுதி செய்யுமா? இறுதிசெய்யுமா? என வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன. விறுவிறுப்பிற்கும் சபையோருடைய கரவொலிக்கும் நிகழ்ச்சியில் பஞ்சம் இருக்கவில்லை. தீர்ப்பு வழங்க கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களைச் சேர்ந்த எழுவர் நடுவர்களாகப் பணியாற்றினர். நிறைவில் இறுதி செய்யும் என வாதிட்ட கிழக்கு மாகாண அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மருத்துவபீட மாணவர் இருவர், பொறியியல் பீட மாணவர் ஒருவரை உள்ளடக்கிய சுவாமி விபுலாநந்தர் அணி இவ்வாண்டுக்கான தமிழ்ச்சங்க வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வெற்றிக்கேடயத்தை தமிழ்ச் சங்கத்தின் பெருந தலைவர் பேராசிரியர் அ.சண் முக தாஸ் வழங்கிக் கௌரவித்தார். (இ-7)

# சீனப்படை நீண்டகாலம் பாவித்த ஏவுகணைக்கப்பல் இலங்கைக்கு

(கொழும்பு)

சீன கடற்படையினால் பயன்படுத்தப்பட்ட ஏவுகணைப் போர்க்கப்பல் ஒன்றை இலங்கைக்கு சீனா வழங்கவுள்ளது.



1993 ஆம் ஆண்டு சீனக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 'ரொங் லிங்' என்ற ஏவுகணைப் போர்க் கப்பலே இலங்கை கடற்படைக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது சீனாவிலுள்ள ஹூடோங் துறைமுகத்தில், இந்தக் கப்பலுக்கு மீள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கை கடற்படையின் வண்ணம் தீட்டப்பட்டு. பி-625 என்ற தொடர் இலக்கமும் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கப்பல் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களின் அணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நவீன போர்க்கப்பலின் பிரதான போராயுதமாக, ரி-79 வகையைச் சேர்ந்த 100 மி.மீ இரட்டைக் குழல் பீரங்கி இருக்கும். அத்துடன், கப்பலின் பின்புற மாக, ரி-76ஏ ரகத்தைச் சேர்ந்த, 37 மி.மீஇரட்டைக்குழல்விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் உலங்கு வானூர்தி ஒன்று தரையிறங்குவதற்கான தளமும், நடுத்தர உலங்குவானூர்தி ஒன்றுக்கான தரிப்பிடம் மற்றும் களஞ்சியமும் உள்ளன. (இ-7)

# தாமதமாகும் சீனப் பிரதமரின் இலங்கைக்கான விஜயம்

(கொழும்பு)

சீன பிரதமர் லி கெகியாங் இந்த மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை பிற்போட்டுள்ளார்.



இந்த மாதம் சீன பிரதமர் இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், இந்தப் பயணத் தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியு ள்ளன.

பத்தரமுல்லவில் காணி வங்கி திறந்து வைப்பது, சீன பிரதமர் லி கெகியாங்கின் இலங்கைக்கான பயணத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எதிர்காலத்தில் முதலீட்டாளர்கள் காணிகளை பெற்றுக் கொள்வதற்கு இந்தக் காணி வங்கி, உதவியாக இருக்கும்.

இக்காணிவங்கி நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில், அமையவுள்ளது. (இ-7)

# விசேட நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவையானது கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக காலை 8.30-பிற்பகல் 3 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் குறித்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தேசிய அடையாள அட்டை (புதியது, புதுப்பித்தல், தொலைந்தது, முதியோர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளல் உட்பட ஏனைய தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்) என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

நடமாடும் சேவை நடைபெறும் கிராம அலுவலர் பிரிவுகளின் விபரம்,

20.09.2018 வியாழக்கிழமை ஜே/ 393, ஜே/394, ஜே/395 ஆகிய பிரிவுகளுக்கு பொலிகண்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும், 22.09.2018 சனிக்கிழமை ஜே/388, ஜே/389, ஜே/390, ஜே/391, ஜே/392 ஆகிய பிரிவுகளுக்கு வல்வெட்டித்துறை நகர சபை பேருந்து நிலைய மேல் மாடியிலும், 27.09.2018 வியாழக்கிழமை ஜே/399, ஜே/401, ஜே/402, ஜே/410 ஆகிய பிரிவுகளுக்கு சுப்பர் மடம் பொதுநோக்கு மண்டபத்திலும், 28.09.2018 வெள்ளிக்கிழமை ஜே/383, ஜே/384, ஜே/385, ஜே/386, ஜே/387 ஆகிய பிரிவுகளுக்கு கெருடாவில் அம்பிகை முன்பள்ளியிலும், 29.09. 2018 சனிக்கிழமை ஜே/413, ஜே/414, ஜே/415, ஜே/416, ஜே/417 ஆகிய பிரிவுகளுக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையிலும், 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை ஜே/409, ஜே/411, ஜே/412 ஆகிய பிரிவுகளுக்கு தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையிலும், 01.10.2018 திங்கட்கிழமை ஜே/396, ஜே/397, ஜே/398, ஜே/ 400 ஆகிய பிரிவுகளுக்கு திக்கம் கலாசார மண்டபத்திலும், 06.10.2018 சனிக்கிழமை ஜே/406, ஜே/408 ஆகிய பிரிவுகளுக்கு கற்கோவளம் அ.மி.த.க.பாடசாலையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வலம்புரிச் செய்தியாளருக்கு அச்சுறுத்தல் யாழ்.ஊடக அமையம் கடும் கண்டனம்

## சதிகாரக் கும்பல்கள் குறித்து விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழின் அலுவலகச் செய்தியாளருக்கு வட மாகாண சபை உறுப்பினர் ஒருவரது உதவியாளரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் யாழ். ஊடக அமையம் தனது வன்மையான கண்டனத்தை பதிவு செய்ய விரும்புகின்றது. அதிலும் குறிப்பாக பெண்கள் தமிழ் ஊடகத் துறையில் காலடியெடுத்து வைக்க அச்சப்பட்டு பின்னடிக்கின்ற சூழலில் இத்தகைய போக்கு ஆரோக்கியமான தாக அமையப் போவதில்லையென்பதையும் சுட்டிக்காட்ட ஊடக அமையம் விரும்புகின்றது.

ஏற்கனவே கடந்த ஆண்டில் இராணுவ அதிகாரியொருவரால் இதே பாணியில் அச்சுறுத்தப்பட்டமையினை சுட்டிக்காட்ட வேண்டியுமுள்ளது.

ஏற்கனவே சிறுகும்பல் ஒன்றினால் அண்மையில் வலம்புரி நாளிதழின் பிரதி எரிக்கப்பட்டமை தொடர்பில் இனங்களிடையே தேவையற்ற மோதல்களை ஏற்படுத்தும் சூழல் பற்றி யாழ்.ஊடக அமையம் எச்சரிந்திருந்ததை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அதேவேளை ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துவது ஊடக சுதந்திரத்தை இல்லாமல்செய்யும் நடவடிக்கையாகும் என புரிந்துணர்வுடன் கண்டனத்தை பதிவு செய்துள்ள யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே.எம் நிலாம் அவர்களுக்கு எமது நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் அரச படைகளாலும் அவர்களது பங்காளிகளாலும் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதும் அரங்கேற்றப்பட்ட தாக்குதல்கள், கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல் போகச் செய்யப்படுதல்களால் நாம் இழந்தவை அதிகம். குறிப்பாக ஊடகத்துறையிலிருந்து பெருமளவிலானோர் வெளியேறும் சூழலும் இதனால் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது சூழல் மாறி அண்மைக்காலமாக தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் சில வங்குரோத்து அரசியல் வாதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் அச்சுறுத்தல்களை பல்வேறு வழிகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடராகவே வலம்புரி பத்திரிகை அலுவலக செய்தியாளர்ஒருவரைதொலைபேசியில் மிரட்டியதையும் குறித்த செய்தியாளர் தனது பாதுகாப்பினை கோரியிருப்பதனையும் நாம் பார்க்கின்றோம்.

அச்சுறுத்தல்கள் மிக்கதொரு சூழலில் மக்களுக்கு உண்மைத்தகவல்களை எடுத்து செல்ல ஊடகங்களால் முடியாதென்பது சொல்லித்தெரியவேண்டிய தொன்றல்ல.

வடகிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் -முஸ்லிம் மக்களது இணைந்த வாழ்வு தவிர்க்க முடியாத பின்னிப்பிணைந்ததொன்று. காலம் காலமாக அதனை சிதைத்து விடும் நடவடிக்கைகள் அரசினாலும் அதனது முகவர்களாலும் அரங்கேற்றப்பட்டே வருகின்றது.

தற்போதைய சூழலில் யாழில் அரங்கேறும் அண்மைய சம்பவங்கள் அதனை மீள உறுதிப்படுத்துவதாகவே கருதவேண்டியுள்ளது.

மீண்டும் இரு இன மதத் தலைவர்களிடமும் இத்தகைய சதிகாரக்கும்பல்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்க கோருவதுடன் மத,இன நல்லிணக்கத்தை பேண உண்மையாகவும் நேர்மையுடன் சதிகாரர்களை புறந்தள்ளி இணைந்து செயற்பட முன்வருமாறு வேண்டுகின்றோம் என யாழ்.ஊடக அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-9)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 6 விதி எண் 1

சுக்கிரன் சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் அனைவரையும் பிரமிக்கச் செய்யும் பேராற்றலுடன் விளங்குவார்கள். பார்க்கக் கவர்ச்சியாக இருப்பார்கள். இந்த உலகத்தில் பிறந்த நாம் எல்லாவிதமான சுகபோகத்தையும் அனுபவிக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். பிரபலமான வசதி வாய்ப்புடன் வாழ்வார்கள். கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்வார்கள். சொல்லும் செயலும் விசித்திரமானது. முயற்சியால் முன்னுக்கு வரத் துடிப்பார்கள். எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். சமாளிக்கும் திறனிருக்கும்.

அழகான கன்னமும் எடுப்பான முகமும் இருக்கும். ஆடம்பரத்தையும் கவர்ச்சியையும் விரும்புவார்கள். சுகபோகவாசி என்று பெயரெடுப்பார்கள். இயல், இசை, நாடகம் என்று பல துறைகளில் கால்பதிப்பார்கள். மிடுக்கான தோற்றம் கொண்ட இவர்கள் தெளிவாகவும் சுத்தமாகவும் அழகாகவும் பேசுவார்கள். நல்ல கற்பனை வளமுடையவர்கள். சமூக சேவை செய்வார்கள். அரசியல் அறிவு இருக்கும். வெளியூர், தூர தேச பயணம் மேற்கொள்வார்கள்.

மிகவும் நல்ல உள்ளமுடையவர்கள். மற்றவர்களின் மனதைத் தன்பக்கம் இழுக்கத் தெரிந்தவர்கள். சுகமாகத் தொழில் செய்து பணம் சேர்ப்பார்கள். சுகவாசிகள். மற்றவர்களின் மனதின் இரகசியங்களை அறிந்து கொள்வார்கள். மற்றவர்களை மகிழ்வித்து பணம் சம்பாதிப்பார்கள். தெய்வீக வழிபாட்டை சரியாகக் கடைப்பிடிப்பார்கள். கலைகளின் நாயகன் என்று பெயரெடுப்பார்கள். அசுர ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் அனைத்து சுகங்களையும் குறைவின்றி அனுபவித்து வாழ்வார்கள். வாகனப்பிரியர். தன் வாகனத்தை அழகாக வைத்துக் கொள்வார்கள். அழகின் மீது இவர்களுக்கு ஒருவித தனிக்கவர்ச்சி இருக்கும். உலக இன்பங்களை அனுபவிக்கவென்றே பிறந்தவர்கள். அயராத உழைப்பாலும் முயற்சியாலும் எதிலும் வெற்றி பெறுவார்கள். செல்வம், புகழ், கௌரவம் இவர்கள் வாழ்வில் என்றென்றும் கூடிக் கொண்டேயிருக்கும். இவர்கள் அதிர்ஷ்ட தேவதையின் அருளைப் பெற்றவர்கள். தைரியமும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்கள். கண்களில் கவர்ச்சி ஒளி வீசும். சுக்கிரனின் சுக அனுபவம் நடவடிக்கையில் தெரியும்.

கதை, காவியம்,ஓவியம், நாட்டியம் போன்றவற்றில் மனம் லயித்துப்போவார்கள். ஐம்புலன்களுக்கு சுகம் தரும் விடயங்களில் அதிக அக்கறை காட்டுவார்கள். சுகபோகம் நிறைந்த வாழ்க்கை வாழ்வார்கள். காம போக விடயங்கள் இவர்கள் மனதைக் பெரிதும் கவரும். வாழ்க்கை வாழ்வதற்கே என்பார்கள். இவ்வுலகம் ஒரு சொர்க்கலோகம் என்று வர்ணிப்பார்கள். நுண்ணறிவு உடையவர்கள். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் தீவிரமாக உழைத்து முன்னேறக் கூடியவர்கள். மூளை பல மிக்கவர்கள். எல்லா விடயத்தையும் நன்கு அறிந்து




வைத்திருப்பார்கள்.

சுதந்திரமான உணர்ச்சிகள் அதிகம் உடையவர்கள். பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். எதிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள். மற்றவர்களின் கேள்விகளுக்கு உடனே பதிலளிப்பார்கள். எதையும் சாதிக்கும் எண்ணமுடையவர்கள். காதல் வலையில் எளிதில் விழுவார்கள். அதே நேரத்தில் காதலை எளிதில் உதறித் தள்ளுவார்கள். பண விடயத்தில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். செய்தொழிலில் தன்னம்பிக்கையும் திறமையும் இருக்கும். உற்சாகமிக்கவர்கள். இருபாலார் தரப்பிலும் ஆழ்ந்த நட்பு இருக்கும்.

எப்போதும் தூய்மையாகவே காட்சியளிப்பார்கள். கலைகளை இரசிப்பார்கள். இயற்கைக் காட்சிகள், அருவிகள், மலைகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள். ஆன்மீகம், மருத்துவம், இசை, ஓவியம், கணிதம் போன்றவற்றில் திறமை மிக்கவர்கள். காரியத்தில் கண்ணாயிருந்து வெற்றி பெறுவார்கள். சமூகத்தை சந்தோசப்படுத்துவார்கள்.

இறை வழிபாட்டில் ஆழ்ந்த பற்றுடையவர்கள். காந்த சக்தி கொண்ட கண்கள் இருக்கும். அதிகம் சிரமப்படாமல் பணம் ஈட்டும் பாக்கியவான்கள். சுருக்கமாகவும் சுத்தமாகவும் பேசுவார்கள். தனக்கு இலாபமில்லாத காரியத்தில் இறங்கி வீண் பொழுதைப் போக்க மாட்டார்கள். தன்னைப் பற்றித் தனிமையில் சிந்திப்பார்கள். மிடுக்காகப் பேசிக் கடுமையாக நடந்து கொள்வார்கள். தனது தகுதிக்குக் குறைவான பெண்களிடம் பழகி வீணான துன்பத்திற்கு ஆளாவார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24.

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,3,12,21,30,4,13,22,31.

**அதிர்ஷ்ட நிறங்கள்**
மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பச்சை, வெளிர் பச்சை.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, கோப்பி கலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள், ஒரேஞ், ரோஸ், கத்தரிப்பூ நிறம்.


**அதிர்ஷ்டஇரத்தினங்கள்**
வைரம், ஓபல், அக்கோமரின், மரகதம், பெரில், சூரியகாந்தக் கல், டர்க்குவால், ஜேட், டெரிடாட்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்



நல்லூர் இராசதானியின் உட்புறத் தோற்றம்

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

இலங்கையின் வடபாகத்திலுள்ள யாழ்ப்பாணக் குடாநாடும் மன்னார் உள்ளிட்ட வன்னிப் பெருநிலமும் வடகிழக்கிலுள்ள திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்களும் வடமேற்கிலுள்ள புத்தளமும் அதனை அண்டிய பிரதேசங்களும் இவ் அத்தியாயத்திற்குரிய ஆய்வுக்களமாக அமையும். முதலில், வடபாகத்தில் எழுச்சி பெற்ற யாழ்ப்பாண இராச்சியம் பற்றியும் அதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிடப்பட்ட மற்றைய பிரதேசங்கள் யாவும் வன்னிச் சிற்றரசுகள் என்ற உபதலைப்பினுள்ளும் ஆய்வு செய்யப்படும்.

இவ் அத்தியாயம் குறிப்பாக கி.பி.1200களிலிருந்து கி.பி.1500கள் வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமையும். இதனைத் தொடர்ந்து வருகின்ற மிகுதி யாழ்ப்பாண இராச்சிய வரலாறு அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆய்வு செய்யப்படும்.

யாழ்ப்பாண இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு எதுவித கல்வெட்டு ஆதாரங்களும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நாணயங்கள், சிற்பங்கள், மட்பாண்ட ஓடுகள், முத்திரைகள், கொடிகள், கட்டட அழிபாடுகள் போன்ற தொல்லியல் ஆதாரங்கள் என்பன மேற்படி பிரதேசங்களில் இடம்பெற்ற ஒரு சில அகழ்வாய்வுகள் மூலமும், மேலாய்வுகள் மூலமும் அரிதாகக் கிடைத்திருக்கின்றன. ஆனால் இவ்வாறான தொல்பொருட்களிலிருந்து இப் பிரதேச அரசியல் வரலாற்றைத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் பெறுவது சிரமமாகும்.

> “யாழ்ப்பாண இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு எதுவித கல்வெட்டு ஆதாரங்களும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நாணயங்கள், சிற்பங்கள், மட்பாண்ட ஓடுகள், முத்திரைகள், கொடிகள், கட்டட அழிபாடுகள் போன்ற தொல்லியல் ஆதாரங்கள் என்பன மேற்படி பிரதேசங்களில் இடம்பெற்ற ஒரு சில அகழ்வாய்வுகள் மூலமும் மேலாய்வுகள் மூலமும் அரிதாகக் கிடைத்திருக்கின்றன”

இருப்பினும், சில சிங்கள மன்னரால் எழுதப்பட்ட ஒரு சில தமிழ்க் கல்வெட்டுகள், சிங்கள நூல்கள், பிறநாட்டார் குறிப்புகள், ஒருசில தமிழ்நாட்டுப் பாண்டியக் கல்வெட்டுக்கள், போர்த்துக்கீச ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்தும் இப் பிரதேசங்கள் பற்றி சில முக்கியமான தகவல்களைப் பெறமுடிகின்றது.

வரலாற்று நூல்களைப் பொறுத்து ஏற்கனவே முன்னுரையில் கூறப்பட்டதுபோல் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பின்புதான் தமிழ் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வையாபாடல், கயிலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம்.

ஐதீகங்களையும் வாய்மொழியாகப் பேணப்பட்டுவந்த மரபுக் கதைகளையும் உள்ளடக்கியும் உள்வாங்கிப் பாளி, சிங்கள நூல்களில் இடம்பெற்ற கதைகளோடு சேர்த்தும், திரிபுபடுத்தியும் அத்தோடு தமிழ்நாட்டுப் பாரம்பரிய வரலாற்று மரபுகளையும் தழுவி, கதைகளாகப் புனைந்து இவை எழுதப்பட்டிருக்கின்றன.

வரலாற்று ஆதாரங்கள் இல்லாத ஒரு நிலையிலும் விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் அறியப்படாத ஒரு நிலையிலும் சாதாரண புலவர்களால் மேற்படி நூல்கள் எழுதப்பட்டமையால் இந்நிலை காணப்படுகிறது.

இருந்தும் மேற்படி பிரதேசங்கள் பற்றியும், அப்பிரதேசங்களில் நிலவிய ஆட்சி, அதிகாரங்கள், அங்கு வாழ்ந்த மக்கள் பற்றியும், மேற்படி நூல்களிலிருந்து கிடைக்கப் பெறும் தகவல்களை ஏனைய வரலாற்று ஆதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கு அந்நூல்கள் பெரிதும் உதவுகின்றன.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டையடுத்து வெளிவந்த ஒரு சில முக்கிய நூல்கள் ஓரளவு நம்பகமான வரலாற்றுத் தகவல்களைத் தருவனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, இராசநாயகம் எழுதிய Ancient Jaffna, ஞானப்பிரகாசர் எழுதிய யாழ்ப்பாண வைபவ விமர்சனம் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இருந்தும், இந் நூலாசிரியர்களும், கூடுதலாக, மேற்கூறப்பட்ட தமிழ் வரலாற்று நூல்களிலுள்ள ஐதீகக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தமது ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளனர். இந்நூல்களில் உள்ள பல்வேறுபட்ட தரவுகளை விஞ்ஞான ரீதியாக நோக்கும்போது, அவற்றைப் பெருமளவில் ஏற்றுக் கொள்ளமுடியாமல் போகின்றது. அத்தோடு மேற்படி இரு ஆசிரியர்களும் வரலாற்று ஆய்வுத்துறை சார்ந்த புலமைசார் பயிற்சி அற்றவர்கள். ஆதலினால் அவர்களால் வரலாற்றை நம்பகமான ஆதாரங்களினூடாக விஞ்ஞான ரீதியாகப் பார்க்க முடியவில்லை.

மேலும், பேராசிரியர்கள் இந்திரபாலா, பத்மநாதன் ஆகிய இருவரும் இவ்விடயம் பற்றி முதன் முதலில் தமது புலமைசார் ஆய்வுகளை நடத்தி பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்கள். இந்திரபாலா அவர்களின், யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (1973) என்னும் நூல் மிக முக்கியமானது.

இருந்தும் இந்நூல் குறிப்பாக, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்துடன் முடிவடைகின்றது. அவ் இராச்சியத்தின் ஆட்சிக்காலம் பற்றிய ஆய்வு இந்நூலில் இடம் பெறவில்லை. ஏனைய தமிழ்ப் பிரதேசங்கள் பற்றிய வரலாறு, இதில் இடம்பெறவில்லை.

பத்மநாதன் அவர்கள் எழுதிய Kingdom Of Jaffna (1969), என்னும் நூல் யாழ்ப்பாண இராச்சியம் பற்றிக் கூறும் முழுமையானதொரு ஆய்வு நூல். இது வன்னிச் சிற்றரசுகள் பற்றியும் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ளது.

ஆனால், யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பத் தோற்றம் பற்றிய பகுதி முறையாக ஆய்வு செய்து எழுதப்பட்ட போதிலும், யாழ்ப்பாண இராச்சிய, ஆரிய சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலம் பற்றிய ஆய்வு தெளிவற்றுக் காணப்படுகின்றது. அத்தோடு, இப்பகுதி கூடுதலாக, ஏற்கனவே கூறப்பட்ட ஆரம்ப தமிழ் வரலாற்று நூல்களிலுள்ள கதைகளை மீளாய்வு செய்வதாகவே காணப்படுகின்றது.

வரலாற்றை அறியவிரும்பும் ஒரு மாணவனுக்கு அல்லது ஆர்வமுள்ள ஒருவருக்கு இந்நூலை வாசித்து அதிலுள்ள விடயங்களை அறிவது பெருஞ்சிரமமாக அமையும். ஆனால், மேற்படி இரு நூல்களும் யாழ்ப்பாண, வன்னி வரலாறுகள் பற்றி அறிய மிக முக்கியமான ஆய்வு நூல்களாகும். இருந்தும் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் இவை எழுதப்பட்டமையால் அதன் பின்னர் ஏற்பட்ட பல்வேறு ஆய்வுகளினூடாக வெளிவந்த சில நம்பகமான தரவுகளையும், விஞ்ஞான ரீதியாக அணுகப்பட்ட முடிவுகளையும் உள்ளடக்க முடியாமல் போய்விட்டன என்பதனையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

இறுதியாக, பத்மநாதன் அவர்கள் 2003 இல் ஆய்வுசெய்து வெளியிட்ட 'இலங்கையில் வன்னியர்' என்ற ஆய்வுநூல், வன்னி வரலாற்று பற்றிய பல நம்பகமான தரவுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

எனவே இந்நிலையில், மேற்கூறப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் இருந்த இராச்சியம் பற்றியும், சிற்றரசுகள் பற்றியும் ஆய்வுசெய்து இவ் அத்தியாயத்தை எழுதுவதற்கு இந்திரபாலா, பத்மநாதன் ஆகியோரின் ஆய்வு நூல்களும், ஒருசில சிங்கள மன்னரால் எழுதப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகளும், மேற்படி காலகட்டங்களில் எழுதப்பட்ட சில பாளி, சிங்கள வரலாற்று நூல்களும் பாண்டி நாட்டில் கிடைக்கப்பெற்ற ஒருசில கல்வெட்டுகளும் சில தொல்லியற் சான்றுகளும் ஒருசில பிறநாட்டாரின் முக்கிய குறிப்புக்களும் போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளுமே இங்கு முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட்டு எழுதப்படுகிறது.

இருந்தபோதிலும், ஒப்பிட்டு நோக்கில் வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது ஏற்கனவே கூறப்பட்ட, ஆரம்ப தமிழ் வரலாற்று நூல்களிலுள்ள விடயங்களும் கருத்திற் கொள்ளப்படும். முதலில் யாழ்ப்பாணம் இராச்சிய அரசியல் வரலாறு பற்றி நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

(தொடரும்)

# ஜனாதிபதி ஒரு சாதாரண மனிதர் அமைச்சர் விஜேமுனி விளக்கம்



(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு சதி இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து பொலிஸ்மா அதிபர் விசாரணைகளை நிறைவு செய்திருப்பார் என தான் நம்புவதாகவும், அவ்வாறு அவர் செய்திருக்காவிடின் பதவி மாற்றம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்ஷா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும். இதனை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஜனாதிபதி இது குறித்து அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில், அவர் ஒரு சாதாரண வாழ்க்கை வாழும் மனிதர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரச தலைவர்களுக்கும் மக்களின் கூச்சல் சத்தம் வெகு விரைவில் வரும்



(கொழும்பு)

அமைச்சர்களுக்கு எதிராக பொதுமக்களால் போடப்படும் கூச்சல் சப்தம், நாட்டுத் தலைவர்களுக்கும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுமாறு மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாத அமைச்சர்கள் தான் இந்த அரசாங்கத்தில் உள்ளனர். ஊடகவியலாளர் சந்திப்புக்களில் இந்த அமைச்சர்கள் திண்டாடுகின்றார்கள்.

காலியில் வைத்து அமைச்சர் ஒருவர் முன்பு பொது மக்கள் கூச்சல் போட்டனர். நேற்று முன்தினம் கூட ஒரு முக்கிய அமைச்சர்ஒருவருக்கு ஹோமாகம பகுதியில் வைத்து கூச்சலிட்டதை பார்த்தோம்.

இந்த அமைச்சர்களுக்கு எதிராக வைக்கும் கூச்சல் குறித்து அரச தலைவர்கள் பாதுகாப்பாக இருக்கவில்லையாயின், அரச தலைவர்களுக்கும் அது நாளை வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விவசாயத் துறையில் இலங்கை முன்னேற்றம்

## ஜனாதிபதி மைத்திரி தகவல்



(கொழும்பு)

இலங்கையில் விவசாயத்துறை சிறந்த முன்னேற்றத்தை தற்போது கண்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எம்பிலிட்டி மகாவலி விளையாட்டரங்கில் இடம்பெற்ற 30ஆவது மகாவலி விளையாட்டு விழாவின் நிறைவு வைபத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நாட்டின் விவசாயத்துறையில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன், கடந்தகால அரசாங்கங்களால் நிறைவேற்றப்படாதிருந்த பல செயற்பாடுகள் கடந்த மூன்று வருட காலத்தில் விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்காக தற்போதைய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் பண்டைய மன்னர் காலந்தொட்டு எமது நாடு தன்னிறைவடைவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது விவசாயத்துறை ஆகும். இதனால் எதிர்காலத்திலும் விவசாயத்தை அடிப்படையாக கொண்டே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

அந்தவகையில் நாட்டின் உற்பத்தி செயற்பாட்டில் விசேட பங்களிப்பை செலுத்திவரும் மகாவலி விவசாய மக்களை பலப்படுத்துவதற்காக அரசாங்கம் என்ற வகையில் வழங்கக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)

# ஏறுபடி நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் "ஏறுபடி" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நீர்வேலியைச் சேர்ந்த நடராசா சிவசுப்பிரமணியம் (செட்டியார்) இந்த நூலை வெளியிட்டு வைத்தார். தனது வாழ்க்கை அனுபவங்களையும் தான் எழுதிய சில பாடல்களையும் சிறு கட்டுரைகளையும்தொகுத்து இந்நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார். (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1508

### சபேசன்

பிறப்பு, இறப்பு மட்டுமே நம்மைத் தேடி வரும் மற்றவற்றை நாம்தான் தேடிச் செல்ல வேண்டும்



### சந்தோஷ்

வீட்டுக்கு தெரியாம பசங்களோட மரம் ஏறி நுங்கு வெட்டி சாப்பிட்ட கடைசி தலைமுறை நாம்தான்




### சந்திரன்

நம்ம பயலுக தான்...



### சானுஜா

இரும்பில் இருக்கும் இந்த ஈரம்கூட சிலர் இதயத்தில் இருப்பது இல்லை



### சாவித்திரி

எலுமிச்சையின் பயன்கள் எழுதச் சொன்னா ஒரு பக்கி செய்வினை செய்யப் பயன்படும்னு எழுதி வச்சிருக்கு! அது அவனோட தப்பில்ல... நம்ம ஊரோட டிசைன் அப்பிடி



### சாருகா

அடிக்கிற வெயிலுக்கு எப்படியெல்லாம் முரட்டுத்தனமா யோசிக்கிறானுங்க...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ராகலை குகைக்குள் மர்ம மரணம் இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு



(ராகலை)

நுவரெலியா - ராகலை பகுதியிலுள்ள குகை யொன்றிற்குள் இருந்து இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் ராகலை - சென்லேனாட்ஸ் பகுதியைச் சேர்ந்த 31 வயது செல்லையா அசோக்குமார் மற்றும் 29 வயது மகேஸ்வரன் ரத்னேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் மிருகங்களை வேட்டையாடுவதற்காக கடந்த 15ஆம் திகதி சென்றிருந்த நிலையில், அவர்கள் காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்களுடன் சென்ற நாயின் உடலும் குகைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு இளைஞர்கள் மிருகமொன்றை வேட்டையாடுவதற்காக குகைக்குள் புகை பிடித்துள்ளதுடன், அதனைத் தொடர்ந்து இருவரும் குகைக்குள் சென்றுள்ளமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மல்லியப்பூ சந்தியில் விபத்து; இருவர் பலி! ஒருவர் காயம்



(ஹற்றன்)

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதி, மல்லியப்பூ பகுதியில், நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில், இருவர் பலியாகியுள்ளனர் என்றும் மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றனிலிருந்து - கொட்டகலையை நோக்கிச் சென்ற ஆட்டோவும் தலவாக்கலையிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்தபேருந்தும், நேருக்கு நேர் மோதியதால், இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். (இ-7)

## போராட்டத்திற்கு மனப்பூர்வமான ஆதரவு வேண்டும்



(ஹற்றன்)

தொழிலாளர்களின் வேதன உயர்வுக்காக நடத்தப்படவுள்ள போராட்டத்திற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் மனப்பூர்வமான ஆதரவை வழங்குமாறு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். தேயிலையின் விலை அதிகரித்துள்ள நிலையில், தொழிலாளர்களுக்கும் நியாயமான வேதனம் பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என அமைச்சர் திகாம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

### "மக்கள் அடிமை அரசியலுக்கு அடிபணியும் நிலை"

## அரசு ஜனநாயகத்தை உயர்ந்தளவில் நடைமுறைப்படுத்தியுள்ளது -அமரவீர



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஜனநாயகத்தை உயர்ந்தபட்ச அளவில் நடைமுறைப் படுத்தியிருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆயிரம் குளங்கள், ஆயிரம் கிராமங்கள் வேலைத் திட்டத்தின் 324 ஆவது திட்டத்தை நேற்று வீரக்கெட்டிய மெதகம பிரதேசத்தில் ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தில் உள்ள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பிணைமுறி விவகாரத்தில் சிலரின் பெயரை பகிரங்கமாகக் கோரி இலஞ்ச ஊழல்ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் தொடர்பில் எங்கள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் இருந்தாலும் அரசாங்கத்தில் உள்ள சிலருக்கு எதிராக இருந்தாலும் முறைப்பாடு செய்வதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முறையிட வேண்டாம் என ஜனாதிபதியோ பிரதமரோ கூட கூறவில்லை.

அந்தளவிற்கு ஜனநாயகம் இந்த நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால், மக்களோ அடிமை அரசியலுக்கு அடிபணியும் நிலை உருவாகியிருக்கின்றது.

அரசியலுக்கு வரும் நபர் குறித்து கவனம் செலுத்தாத நிலை சமூகத்தில் காணப்படுவதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

## மன்னார் சிறுவர் பூங்கா இன்று திறந்து வைக்கப்படும்



(மன்னார்)

மன்னார் நகர சபைக்குட்பட்ட மன்னார் சிறுவர் பூங்காவின் அபிவிருத்தி பணிகள் முழுமையாக பூர்த்தியடைந்துள்ள நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை சிறுவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து விடப்படவுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபையின் பாதீட்டு நிதியின் கீழ் சுமார் 10 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் குறித்த சிறுவர் பூங்கா புனரமைப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

பூங்காவில் மேலதிகமாக சிறுவர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு உபகரணங்களும் பூட்டப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மன்னார் நகர சபையின் கட்டுப்பாட்டில் குறித்த சிறுவர் பூங்கா காணப்பட்ட போதும் கட்டுப்பாடுகளையும் மீறி இளைஞர்களும், பெரியவர்களும் பூங்காவை பயன்படுத்தியிருந்தனர்.

இதன் காரணமாக சிறுவர்களின் பல்வேறு விளையாட்டு சாதனங்கள் சேதமடைந்து காணப்பட்டன. இந்த நிலையில் மன்னார் நகர சபையின் முதல்வர் தலைமையில் புனரமைப்பு பணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்த நிலையில் மன்னார் நகர முதல்வர் மற்றும் மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை காலை சிறுவர் பூங்காவை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னாரில் தற்காலிகமாக அமைக்கப்பட்டு வரும் அரச மற்றும் தனியார் பேருந்து தரிப்பிடங்களை பார்வையிட்டதோடு, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

### கொலைக் குற்றச்சாட்டில் கைதான

## பிரதேச சபைத் தவிசாளர் மீண்டும் விளக்கமறியலில்

(புத்தளம்)

பிணை நிபந்தனையை மீறியமைக்காக புத்தளம் பிரதேச சபைத் தவிசாளர் அஞ்சான சந்துருவன் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை நிறைவடையும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நபரொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அஞ்சான் சந்தருவானுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந் தது.


எனினும் அந்த தடை உத்தரவினை மீறி அவர், கடந்த 10 ஆம் திகதி வெளிநாடு செல்ல முயற்சித்த போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

ஆகவே பிணை நிபந்தனையை மீறியமைக்காக அவரை வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## ராஜா நல்ல ராஜா



நாட்டரசன்புரம் என்ற நாட்டை மார்த்தாண்டன் என்ற மன்னன் ஆண்டார். அவர் தனது நாட்டில் பல சிரமங்களுக்கிடையில் மிகப் பெரிய பூந்தோட்டம் ஒன்றை அமைத்தார். அதில் எல்லா வகையான பூச்செடிகளையும் வளர்த்தார்.

பல நிறத்தில் பூமரங்களையும் அமைத்தார். பூமரங்களை ஒட்டி நல்ல காய், கனிகளைத் தரும் மரங்களையும் அமைத்தார். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற புற்களையும் புல்லின் நடுவே தரையில் படரும் சிறிய பூச்செடி வகையும் வளர்த்தார்.

மரங்களிலும் புதர்களிலும் உயர்ந்த சாதிப் பறவைகளையும் முயல், அணில் போன்றவைகளையும் வளர்த்தார். வைரத்தை தங்கத்தில் பதித்தது போல பொன்னிற புள்ளிமான்கள் அந்தத் தோட்டத்தில் அங்குமிங்கும் துள்ளியோடின.

அந்தத்தோட்டத்தைக் கண்டால் மனம் அமைதியடையும். கவலைகள் மறந்து போகும். அப்படி ஒரு அற்புதமாக அந்தத் தோட்டம் அமைந்திருந்தது. அந்தத் தோட்டத்தைக் காணவும் ரசிக்கவும் பல தேசத்து ராஜாக்களும் சிற்றரசர்களும் வருவர்.

அவர்களை மன்னர் வரவேற்று உபசரிப்பார். அவர்கள் தோட்டத்தைச் சென்று காண்பர், பிரமிப்பர். இத்தனை பெரிய இடத்தை வளைத்து இத்தனை எழிலான ஒரு தோட்டத்தை அமைக்க முடியுமா? என்று வியப்பர். எனினும் அந்தத் தோட்டத்தைச்சுற்றி பார்த்துக் கொண்டே வரும் போது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரும் போது முகம் சுளிப்பர்.

ஏனென்றால் அந்த இடத்தில் ஒரு பிரிந்தும் பிரியாததுமாக கிழிந்த காய்ந்த, ஓலைகளுடன் கூடிய ஒரு சிறுகுடிசை இருந்தது. அந்தக் குடிசையின் சுற்றுச்சுவர்கள் வெறும் களிமண்ணால் பிசைந்து கட்டப்பட்டிருந்தது.

அந்த ஓலைக் குடிசையைச் சுற்றி துவைக்கும் கல்லும் முக்கூட்டுக் கற்களால் அடுக்கப்பட்ட ஒரு சிறு அடுப்பும், ஏழெட்டு நைந்து போன துணிமணிகளும் அலுமினியக் குவளைகளும் கிடக்கும். குடிசையைச் சுற்றி நாகவாளி செடி நிறைந்து இருக்கும்.

இத்தனை அற்புதமான ஒரு தோட்டத்தின் நடுவே இத்தனை கோரமான பஞ்சக்குடிசை ஒன்று ஏன் உள்ளது என்று யாருக்குமே புரியவில்லை.

எனினும் அந்தக் காரணத்தை பேரரசரிடம் கேட்கும் தைரியமோ அல்லது அந்தக்குடிசை இருப்பது தோட்டத்தின் எழிலைக் கெடுப்பதாக உள்ளது என்று கூறவோ யாருக்கும் துணிவே வரவில்லை.

நாட்கள் சென்றன. மகிபாலன் என்றொரு சிற்றரசன் அந்தத்தோட்டத்தைக் காண வந்தான். வழக்கம் போல மன்னருடன் சேர்ந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தபடி அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்தபடி வந்தான்.

திடீரென அவன் கண்கள் குடிசையைக் கண்டது. உடனே முகம் வாடினான். அத்தனை எழிலான தோட்டத்தில் இப்படி ஒரு ஏழ்மைத் தோற்றமுடன் கூடிய குடிசை ஒன்று இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

உடனே அரசரிடம், "மன்னா இந்த எழிலான தோட்டத்தில் இப்படியொரு எளிய குடிசை இருப்பதன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

உடனே மன்னன், "மகிபாலா! இந்தக் குடிசை உன்னைப்போன்ற ஒரு தைரியசாலியின் குடிசை. நான் எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தோட்டத்தை உருவாக்க முயன்ற போது ஒரு பெரிய பரப்பளவுடன் கூடிய இடம் எனக்கு மிகவும் அவசியமாகியது. நாடு முழுக்க அமைச்சர் அந்த மாதிரி ஒரு இடத்தைத் தேடிய போது இந்த இடம் அகப்பட்டது. ஆனால், பெரிய இடத்திற்கு நடுவே இந்தக் குடிசையும் இருந்தது.

"இதில் இருந்த ஏழைக் கிழவியிடம், நீ இந்தக் குடிசையை காலி செய்ய வேண்டும். இங்கு மன்னர் மிகப் பெரிய பூந்தோட்டம் அமைக்க இருக்கிறார்" என்று கூறியபோது கிழவி மறுத்திருக்கிறாள்.

விபரமறிந்த நான் நேரில் வந்து, "இடத்தைக்காலி செய்" என்று கூறினேன்.

ஆனால் அந்தப் பெண்ணோ, "மன்னா! இது என் பாட்டன்,பூட்டன் காலத்துக் குடிசை. இதைத் தாங்கள் அழிப்பதை நான் விரும்பவில்லை. என் உயிரே போனாலும் இதனை இடிக்கவோ, ஓலைகளைப் பிரித்தெறியவோ நான் மனதார ஒப்புக் கொள்ள மாட்டேன். படைபலம் நிறைந்த நீங்கள் நினைத்தால் என்னை ஒரே நிமிடத்தில் கொன்று விடலாம்.

"நான் இறந்த பின்பு இந்த இடத்தை நீங்கள் இடித்து, சிதைத்து உமது தோட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால், நான் இறந்தாலும் எனது பூர்வீகக் குடிசையை அழித்து என் மனதில் வேதனையை ஏற்படுத்தியதற்காக தங்களுக்கு இறைவன் நிச்சயம் தண்டனையைத்தந்தே தீருவார்" என்று கூறி அழுதார்.

"அவள் கண்ணீரில் இருந்த நியாயமும் பூர்வீக நினைவுச் சின்னத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் மனோ தைரியத்தால் என்னை எதிர்த்து அவள் பேசிய வீரமும் என் மனதை நெகிழ வைத்தது. அவள் மன உணர்வை மதித்து, நான் இந்தக் குடிசையை அகற்றாமல் இந்தத் தோட்டம் உருவாக்கிய நான்கு, ஐந்து ஆண்டுகளில் அந்தக் கிழவி இறந்து விட்டாள்.

"அவளுக்குப்பின் இந்தக் குடிசையை ஆள யாரும் சந்ததிகள் இல்லை. என்றாலும் அந்தக்கிழவியின் உணர்வுக்கும் வீரத்திற்கும் ஒரு மதிப்பு தர எண்ணி இந்தக் குடிசையை அகற்றவில்லை" என்றார். பேரரசரின் பெருந்தன்மையையும் நல்ல பண்பையும் மகிபாலன் வியந்து பாராட்டினான்.

நீதி : மனிதர்களாகிய நாம் மற்றவர்களின் மன உணர்வுகளை மதிக்க வேண்டும். யாரையும் மனம் நோகச் செய்தல் தவறு. மன்னரின் பெருந்தன்மையான குணத்தை நீங்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

## பழமொழியும் விளக்கமும்

➢ வெந்து கெட்டது முருங்கை, வேகாமல் கெட்டது அகத்தி

முருங்கைக் கீரையை அதிகம் வேகவைத்தால் அதன் சத்துக்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். அகத்திக் கீரையை அதிகம் வேகாமல் பயன்படுத்தினால் முழுமையாக அதன் சத்து கிடைக்காது.

➢ பாவிக்குப் பாம்பு கண்

நியாயத்திற்கும்,உண்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பவர்களைக் குறிக்கும். பாம்புக்கு கண்ணிருந்தாலும் அது தனது உணர்திறத்தாலேதான் பிறவற்றைக் கண்டுணர்கின்றது.

➢ ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

ஆல் என்பது ஆலமரம் . வேல் என்பது வேப்பமரம். ஆலமரத்தின் குச்சியும், வேப்ப மரத்தின் குச்சியும் கொண்டு பல் துலக்கும்போது இவை பற்களுக்கு நல்ல வலுவைத் தரும். சிறந்த மருத்துவப் பண்புகளையும் கொண்டவை. ஆகையால் இவை கொண்டு பல் விளக்க பல்வளம் சிறக்கும்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.09 18

❖1924-மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21நாள் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

❖1961-ஐ.நாவின் பொதுச்செயலர் டாக் ஹமாஷெல்ட் கொங்கோவில் அமைதிக்கான பேச்சு வார்த்தையில் பங்கேற்றபோது விமான விபத்தில் உயிரிழந்தார்.

❖1968-இந்திய உளவுத்துறை நிறுவனம் றா அமைப்பு உருவாக்கப்பட்டது.

❖1972-இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகாண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை அடைந்தனர்.

❖1980-சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.

❖2006-கிழக்கிலங்கை, அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1925-இரா.சாரங்கபாணி, தமிழ்ப் பேராசிரியர், தமிழறிஞர் (இ. 2010)

❖1928-பண்டரிபாய், தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2003)

❖1949-விஷ்ணுவர்தன், இந்தியத் திரைப்பட நடிகர், பாடகர் (இ. 2009)

❖1950-சபனா ஆசுமி, இந்தியத் திரைப்பட, தொலைக்காட்சி, நாடக நடிகை

❖1968-உபேந்திரா, இந்திய நடிகர், பாடகர்

❖1979-வினய், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖1986-பல்ஜிந்தர் சிங், இந்திய தடகள வீரர்

❖1989-அசுவினி பொன்னப்பா, இந்திய இறக்கை பந்தாட்ட வீரர்

### இறப்புகள்

❖1945-இரட்டைமலை சீனிவாசன், ஆதி திராவிடர் இயக்கத் தலைவர் (பி. 1859)

❖1958-பக்வான் தாஸ், இந்திய இறை மெய்யியலாளர், அரசியல்வாதி (பி. 1869)

❖1961-டாக் ஹமாஷெல்ட், ஐ.நாவின் 2 ஆவது பொதுச் செயலர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற சுவீடியர் (பி. 1905)

❖1966-வித்துவான் க.வேந்தனார், ஈழத் தமிழறிஞர் (பி. 1918)

❖1978-ஆபிரகாம் கோவூர், இலங்கை, மலையாள உளவியலாளர் (பி. 1898)

❖1992-முகம்மது இதயத்துல்லா, இந்தியாவின் 6 ஆவது குடியரசுத் துணைத் தலைவர் (பி. 1905)

❖ 2011-டி.கே.கோவிந்த ராவ் கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1929)

### சிறப்பு நாள்

❖எயிட்சு விழிப்புணர்வு நாள் (அமெரிக்கா)

❖உலக நீர் கண்காணிப்பு நாள்.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 85 | 100 |
| பச்சைமிளகாய் | 90 | 70 | 100 |
| தக்காளி | 40 | 25 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 130 | 60 | 100 |
| கரட் | 170-250 | 120 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 80 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 40 | 100 |
| லீக்ஸ் | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 100 |
| போஞ்சி | 140 | 120 | 170 |
| கத்தரிதம்பள்ளா | — | 60 | 20 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 |
| இராசவள்ளி | 150 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 90 | 100 |
| முள்ளங்கி | 50 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 110 | 60 |

பல் குழுவும் பாழ்செய்யும்உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு
~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கொல்லாமல் கொல்லும் விபத்து மரணங்கள்

நாடு என்றால் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு வள்ளுவர் தக்க விளக்கம் தருகிறார்.

*உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு.*

நாடு என்றால் அங்கு பசி என்று வருந்தும் வறுமை இருக்கலாகாது. தீராத நோய் இருக்கக் கூடாது. இடையுறாத பகை இருத்தல் ஆகாது என வள்ளுவர் நாட்டின் தன்மை பற்றிக் கூறுகிறார்.

இந்த மூன்று இயல்பும் நம் நாட்டில் சேர்ந்திருப்பதுதான் மிகப்பெரும் துன்பம்.

வறுமை என்ற கொடுமை இன்னமும் நம் நாட்டில் இருக்கவே செய்கிறது. எத்தனையோ குடும்பங்கள் மூன்றுவேளை உணவுக்கும் அந்தரிக்கும் அவலங்களைக் காணமுடியும்.

தவிர, நோய் என்பதும் நம் நாட்டில் தாண்டவமாடுகிறது. புற்றுநோய் முதல் சலரோகம் வரை மொத்த சனத்தொகையில் கணிசமானவர்களை வாட்டி வதைக்கிறது.

புற்றுநோய் காரணமாக இளம் தாய்மாரின் மரணம் பிள்ளைகளை அந்தரிக்கச் செய்கிறது. இதற்கு மேலாக நாட்டுக்குள்ளேயே பகை உணர்வு மாறாமல் இன்னமும் தொடர்கிறது.

ஆக, ஒரு நாட்டில் எதெது இருக்கக்கூடாது என வள்ளுவர் கூறினாரோ அதெல்லாம் நம் நாட்டில் தாராளமாக இருக்கின்றது.

இதற்கு அப்பால், விபத்து மரணங்களும் கடன் சுமைகளால் ஏற்படுகின்ற தற்கொலை இறப்புக்களும் கேட்போர் மனதைக் கருக்கிச் செல்கிறது.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த கார் – புகையிரதவண்டி விபத்தில் சிறுமி ஒருவர் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண்கள் உயிரிழந்த சம்பவம் கேட்போர் மனதை சுட்டு எரித்தது.

கற்பனையில் கூட நினைத்துப் பார்க்கப் பயமாக இருக்கக்கூடிய ஒரு சம்பவம் நிஜமாகிய போது, அது மனித மனங்களை வதைக்கவே செய்யும்.

இவ்வாறாக இதயத்தை எரித்துக் கருக்கக் கூடிய சம்பவங்களைக் கேட்பது நல்ல நாட்டுக்கு உகந்ததன்று.

எனவே விபத்து மரணங்களைத் தடுப்பது தொடர்பில் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும்.

படைத்தரப்புக்கென பாதுகாப்புச் செலவுத் தொகையை பன்மடங்கு அதிகரிக்கின்றவர்களுக்கு, புகையிரத கடவைகளைப் பாதுகாப்பானதாக ஆக்குகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது.

பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் நடந்த விபத்தில் நான்கு பேர் பலி என்ற செய்தி அந்த நான்கு பேருடன் மட்டும் நின்று விடவில்லை.

மாறாக அந்தக் குடும்பம்; அவர்களின் உறவுகள்; ஊர்; சமூகம்; குறித்த விபத்துச் செய்தியால் அதிர்ந்துபோன நாட்டு மக்கள் என பல தளத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது எனும் போது,

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதாக நிலைமையை மாற்ற வேண்டும்.

இதுவே நாட்டுக்கு நல்லது.

# எதிர்க்கட்சி அரசியல் செய்ய நான் தயாராக இருக்கிறேன்

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(சம்மாந்துறை)

எதிர்க்கட்சி அரசியலுக்கு அஞ்சாத கட்சி என்றால் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் வளர்த்த இந்தக் கட்சியை தவிர வேறெதுவும் இருக்க முடியாது. எதிர்க்கட்சி அரசியல் செய்வதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆளும கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சியாக இருந்தாலும் முஸ்லிம்களை ஆளும் கட்சி இந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் 18ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவரை இழந்துவிட்டதாக நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தப் பேரியக்கம் மூலம் அவர் எங்களுடன் பெரும் சொத்தாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அஷ்ரஃபின் அரசியல் ஆளுமை என்பது சாமானியமானதல்ல. அவரது காலத்தில் தோல்விகளை கண்டு நாங்கள் துவண்டுபோகவில்லை.

உற்சாகமாக அரசியல் செய்வதாக இருந்தால் எதிர்க் கட்சியில் அமரவேண்டும். இதற்கு தயாராக இருந்தால் நானும் தயார். அமைச்சுப் பதவிகள் இல்லாவிட்டாலும் கட்சி வாழும் என்பதை நிரூபித்த கட்சி முஸ்லிம் காங்கிரஸ் தவிர வேறெதுவும் கிடையாது.

ஏனைய கட்சிகள் முடிந்தால் அமைச்சுப் பதவிகளை துறந்துவிட்டு எதிர்க்கட்சியில் அமர்ந்து பாருங்கள். அந்தக் கட்சி இடம் தெரியாமல் அழிந்துபோய்விடும். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க் கட்சியில் இருக்கும்போது வளர்ந்த மாதிரி எப்போதும் வளர்ந்ததில்லை. அதுதான் இந்தக் கட்சி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை.

என்னை காரசாரமாக விமர்சிக்கின்றவர்கள் நேரில் கண்டால், தலைவர் என்று அழைக்கிறார்கள். அதுதான் இந்தக் கட்சியின் தலைமைக்கு இருக்கின்ற அந்தஸ்து. மர்ஹூம் அஷ்ரஃபின் மகுடத்தை சூடிக்கொண்டிருப்பதால் எனக்கு கிடைக்கின்ற மகிமையே தவிர, இதுவேறொன்றுமல்ல.

இந்த இயக்கத்திலிருந்து அரசியலை கற்றுக்கொண்டு சில்லறை கட்சிகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள் மறைந்த தலைவர் வளர்த்த கட்சியை எதுவும் செய்துவிட முடியாது. இந்த இயக்கத்தை வாழவைப்பதற்கு போராளிகளும் இளைஞர்களும் என்றும் தயார் நிலையில் இருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற மாபெரும் விருட்சத்தை வளர்ப்பதற்கு பலர் பொருளாதார ரீதியாகவும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பங்களிப்புச் செய்துள்ளனர். எம்.பி.எம்.அஸ்ஹர், சிவநாயகம், சிவகுருநாதன் போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் இந்தக் கட்சியை வளர்ப்பதற்கு பெரும் பங்காற்றியிருக்கிறார்கள்.

கட்சி யாருக்கும் கதவுகளை மூடவில்லை. கட்சியின் கதவு விசாலமாக திறந்து கிடக்கிறது. பிரிந்துசென்ற பலர் இன்று கதவுகளை தட்டுகின்றனர்.

தேர்தல் காலங்களில் சிலர் வெளியேறுவதுண்டு, சென்றவர்களும் திரும்பி வருவதுண்டு. வருகின்றவர்களுக்கு பதவிகளும் தாராளமாக காத்திருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் டி.எல்.டபிள்யூ குணவர்த்தன தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சி வைத்திய சாலை வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் கடந்த மாதம் 30.08.2018 அன்று மத்திய சுகாதார அமைச்சில் அறிக்கையிட்ட மகப்பேற்று வைத்திய நிபுணர் உடன் அமுலுக்கு வரும்வகையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தமக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுமுறையான 14 கடமை நாட்கள் விடுமுறையின் பின்னர் அவர் நேற்று தமது கடமைகளை கிளிநொச்சி வைத்தியசாலையில் பொறுப்பேற்றார். (2-312)

# கடற்கரையை அண்டிய பகுதிகள் சிரமதானப் பணிமூலம் துப்புரவு

(பூநகரி)

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் பூநகரி நாச்சிக்குடா மீன்பிடித் துறைமுகம் மற்றும் அதனை அண்டிய கடற்கரைப் பகுதியும் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்னேந்திரன் உட்பட பிரதேச செயலக அலுவலர்கள், பூநகரி கடற்றொழில் சங்க சமாசப் பிரதிநிதிகள், கிராம மட்ட கடற்றொழிலாளர், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கிராம அலுவலர்கள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளனர். (2-84)

# கடும் வரட்சியால் 16 மாவட்டங்களிலுள்ள 7 இலட்சத்து 15 ஆயிரத்து 616 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் வரட்சியான காலநிலையால் 16 மாவட்டங்களிலுள்ள 2 இலட்சத்து 12 ஆயிரத்து 737 குடும்பங்களைச் சேர்ந்த 7 இலட்சத்து 15 ஆயிரத்து 616 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் மற்றும் உலர் உணவுப் பொதிகள் என்பன விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் குறித்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற் பேட்டை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# குருசாமி வித்தியின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 22ம் திகதி சனிக்கிழமையும் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இரண்டு நாள் அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

முதலாம் நாள் அமர்வில் நூல் வெளியீடும் கௌரவிப்பும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் அமர்வில் பரிசில் வழங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வர். (ம-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நாம் பெரிய மனிதர்கள் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒருநாள் அனைவரும் உலகத்தை விட்டே செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள். அப்போது மக்கள் நம்மை மறந்து விட்டு, அவரவர் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர்.
- கடவுள் என்றும் நிரந்தரமானவர். அவருக்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. எல்லா ஆற்றலும் அவருடையதே. எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அவரின் அதிகாரத்தின் கீழே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
- கடவுளின் கட்டளைப்படியே இயற்கை இயங்குகிறது. எல்லாம் வல்ல கடவுளை நம்மால் வழிபட மட்டுமே முடியும். செயல்களின் பலனை அவரிடம் ஒப்படைத்துவிட்டு பற்றில்லாமல் கடமையில் ஈடுபடுங்கள்.
- மக்கள் வணங்கும் எல்லா வடிவங்களிலும் ஒரே கடவுளே வீற்றிருக்கிறார். இதை உணர்ந்து கொண்டால் நம்முள் வேற்றுமை மறைந்துவிடும்.



ஈவினை தெற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 5 ஆம் வட்டார உறுப்பினர் இ.அரிகரன் தனது சொந்த நிதியில் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகளை வழங்கி வைத்தார். (படம்:-சக்தி)

# நவிண்டில் கலைமதி அணி வெற்றி






அரியாலை சரஸ்வதி விளை யாட்டுக்கழகம் "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நட த்தி வருகின்றது. கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதற்சுற்றின் ஆட்டமொன்றில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இதில், நவிண்டில் கலைமதி அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் நாயக னாக கலைமதி அணியின் விதுர்சன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# அச்செழு வளர்மதி அணி வெற்றி





அரியாலை சரஸ்வதி விளை யாட்டுக்கழகம் 'வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதற் சுற்று ஆட்டமொன்றில், புங்குடு தீவு நசரேத் அணியை எதிர்த்து அச் செழு வளர்மதி அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணி களும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதைநாடப்பட்டது.

அதில் அச்செழு வளர்மதி அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக, வளர்மதி அணியின் வச ந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# பதற்றமில்லாது வெற்றி பெற்றது கிளிநொச்சி உதயதாரகை



அரியாலை சரஸ்வதி விளை யாட்டுக்கழகம் 'வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 16 ஆம் திகதி நடைபெ ற்ற போட்டியில் நாவாந்துறை கலை வாணி அணியை எதிர்த்து கிளி நொச்சி உதயதாரகை அணி மோதியது.

இதில் நாவாந்துறை கலை வாணி அணி, 01:00 என்ற கோல் கள் கணக்கில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக கலைவாணி அணியின், ஜெயந் தன் தெரிவுசெய்யப்பட்டார். (க-26)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் மாபெரும் தாச்சிப் போட்டி





கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணை ந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத் தின் அனுசரணையுடன் விநாய கர் விளையாட்டுக் கழக மைதான த்தில் தென்மராட்சி ரீதியில் நடத்தி வந்த பெண்களுக்கான தாச்சி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட் டியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இவ் இறுதிப்போட்டி யில் கைதடி மத்தி குமரநகர் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவற் குழி காந்தி விளையாட்டு கழகம் மோதியது.

இடைவேளை வரை காந்தி விளையாட்டு கழகம் 4 புள் ளிகளையும் குமரநகர் விளை யாட்டு கழகம் 1 புள்ளியினையும் பெற்றிருந்தது. எனினும் இடை வேளையை தொடர்ந்து நடைபெ ற்ற போட்டியில் குமரநகர் விளை யாட்டுக்கழகம் 8 புள்ளிகளையும் காந்தி விளையாட்டுக்கழகம் 4 புள்ளிகளையும் பெற்று குமரநகர் விளையாட்டு கழகம் இப் போட்டி யில் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தது.

இதேவேளை இரண்டாம் இட த்தை நாவற்குழி காந்தி விளை யாட்டுக்கழகமும் மூன்றாம் இட த்தை கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.

தொடரில் இன்று நடைபெற வுள்ள ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில் கைதடி நவபுரம் நவ சக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி A விளையாட்டுக்கழகம் மோதவு ள்ளது. (க)

# 'தீவுகளின் போர்' கிரிக்கெட் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் இறுதியில்



நெடுந்தீவு கிரிக்கெட் சம்மே ளனம் நடத்தும் தீவுகளின் போர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி.

காலிறுதி யில் நெடுந்தீவு மத்திய அணியை வீழ்த்தி அரையிறுதியில் நெடுந்தீவு B அணி யு டன் பலப்பரீ ட்சை நடத்தியது அல் லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி. விறு விறுப் பாக நடந்த இப்போட்டியில் 10 ஓவர் கள் நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழ ந்து 127 ஓட்டங்கள் குவித்தது அல் லைப் பிட்டி சென்.பிலிப்ஸ் அணி. 128 என்ற வெற்றி இலக்கு டன் துடுப்பெடுத்தாடிய நெடுந்தீவு B அணி 9.03 ஓவர்களில் சகல விக்கெட்டுக ளையும் இழந்து 69 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றுக்கொ ண்டன.

இதன் மூலம் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி 58 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தெரிவானது. இறுதிப்போட்டியில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி நெடுந்தீவு A அணியுடன் மோதவுள்ளது. (க-7)

## கைதிகளின் விடுதலை...

நடக்கும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இந்த விடயத்தில் உடனடியாகக் கரிசனை செலுத்த வேண்டும். சரியான பதில்கள் கிடைக்காவிடில், அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் உண்ணாவிரதமிருக்கும் குடும்பங்களின் வேண்டுகோளுக்கமைய நாங்கள் மாகாணம் தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்தும் நிலைக்குத் தள்ளப்படுவோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் எச்சரித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவித்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 14ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள எட்டு அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா போன்ற நீதிமன்றங்களில் அவர்களுக்கான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கை தாங்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டுத் தாங்கள் விடுதலை செய்வதற்கான ஏதுநிலைகள் உருவாக்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

அரசியல் கைதிகள் அனைவர் மீதும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் கடுமையான சித்திரவதைகள் மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு தான் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவர்களிடம் விசாரணைகள் மேற்கொண்ட தரப்பு அவர்களை சித்திரவதை செய்து அவர்களை ஒப்புக்குக் கொள்ள வைத்து உண்மைக்குப் புறம்பான பொய்ய்யான வாக்கு மூலங்களை பெற்றுள்ளன.

குற்றங்கள் எதுவும் செய்யாத அவர்களுக்கெதிராக சாட்சியங்கள் எதுவுமில்லை. இதனால், அவர்களுக்குச் சாட்சியங்களை முன்னிலைப்படுத்த முடியாத சூழல் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் வழக்குகளைத் தொடர்ந்தும் நடத்தினால் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற சூழல் ஏற்படுமென்ற காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குகளுக்கான தவணைகளை போட்டு காலத்தை இழுத்தடித்து வருகின்றது. இதனால், மன உளைச்சலுக்கு உள்ளான் அரசியல் கைதிகளே தற்போது உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கெனவே வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று அரசியல் கைதிகளின் வழக்குகள் திடீரென அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட காரணத்தினால் அவர்கள் சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தார்கள். போராட்டத்தின் பலனாக கடந்த ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி அவர்களுடைய வழக்குகள் மீண்டும் வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன், இராசதுரை திருவருள் ஆகியோரின் வழக்குகளே இவ்வாறு மாற்றப்பட்டது.

அவ்வாறு மாற்றப்பட்ட பின்னர் கடந்த மே மாதம் 15ஆம் திகதி மீண்டும் வவுனியாவில் வழக்குகள் இடம்பெறும் என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் ஓகஸ்ட் மாதம் 08ஆம் திகதி வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படுமெனத் தவணையிடப்பட்டது. ஆனால், அவ்வாறு கூறப்பட்ட திகதிக்கு முன்னதாக கடந்த யூலை மாதம் 12ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் தாமாகவே நீதிமன்றத்தைக் கோரி கைதிகளுக்குத் தெரியாமலேயே அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியது.

இந்நிலையில் தற்போது அவர்களுடைய வழக்குகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ஆம திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த மூன்று அரசியல் கைதிகளினதும் வழக்குகள் வவுனியா நீதிமன்றத்தில் தொடர்ந்தும் இடம்பெறுமாகவிருந்தால் சாட்சியங்கள் எதுவுமில்லாத நிலையில் அவர்கள் மூவரும் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இவ்வாறான சூழலில் அவர்களுடைய விடுதலையைத் திட்டமிட்டுத் தடுக்க வேண்டுமென்ற நோக்கில் பொய்ச் சாட்சிகள் யாரையாவது தேடிப் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தலாம் அல்லது வழக்குகளை நடத்தாமல் நீண்ட காலத்திற்கு அவர்களைச் சிறைகளுக்குள் வைத்துச் சாகடிக்கலாம் எனச் சட்டமா அதிபர் திணைக்களம் திட்டமிடுகிறதா? எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. இதன்மூலம் அவர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்படுகின்றார்கள் என்ற விடயம் புலனாகியுள்ளது.

இந்தநிலையில் தான் தங்களுடைய வழக்குகள் இடம்பெறாமல் இழுத்தடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் குறிப்பிட்ட மூன்று அரசியல் கைதிகள் உட்பட எட்டு அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளினது கோரிக்கைகள் நியாயபூர்வமானது.

ஏற்கெனவே ஐ.நா உரிமைகள் பேரவை இலங்கையிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒரு மோசமான சட்டம் என்பதால் அந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டுமெனக் கூறியிருக்கின்றது. இந்தச் சட்டத்தின் கீழ் தான் அரசியல் கைதிகளான இளைஞர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தான் இவர்கள் அனைவரும் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுச் செய்யாத குற்றங்களைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.

எனவே, குற்றங்கள் எதுவும் செய்யாத அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதே எங்களுடைய நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. எனவே, நாங்கள் அரசியல் கைதிகளுக்கு எங்களுடைய பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமைக்கான போராட்டத்தில் ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டமைக்காகவும் தமிழர்கள் பழிவாங்கப்பாட்டுள்ளனர். அரசியல் கைதிகளின் பிரச்சினை அவர்களது தனிப்பட்ட பிரச்சினையோ அல்லது குடும்பங்களுடைய பிரச்சினைகளோ அல்ல. அரசாங்கத்தின் இவ்வாறான அநீதிகளுக்கெதிராக குரல் கொடுக்க வேண்டிய பொறு ப்பு ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்துக்குமிருக்கிறது. எனவே, அரசியல் கைதிகளினது விடுதலைக்காக ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் குரல் கொடுக்க வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகின்றோம்.

தொடர்ந்தும் அவர்கள் உண்ணா விரதமிருக்கும் போது அவர்களது உள்ளுறுப்புக்கள் அனைத்தும் பாதிப்படைந்து உயிரழிவைச் சந்திக்கக் கூடிய அச்சுறுத்தலான நிலையும் காணப்படுகின்றது.

எனவே, யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடக்கு கிழக்கிலுள்ள பொது அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிலையங்கள், தொழிற்சங்கங்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அமைப்புக்கள், மீனவர் சங்கங்கள் என அனைத்துத் தரப்பினரும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு வலுச் சேர்க்கும் வகையில் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-9)

# பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலேயே புதிய சட்டம்

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தினால் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச்சட்டமானது பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் அமையும் என பொதுஜன பெரமுன கட்சித் தலைவரான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாது செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பயங்கரவாதிகளை ஊக்குவித்து, அவர்களுக்கு சலுகைகளை வழங்கும் செயறபாட்டை போன்றதொரு சட்டத்தை கொண்டு வருவதற்காகவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த சட்ட வரைபுக்கேற்ப அவர்களுக்கான தண்டனை குறைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு எதிரான சாட்சிகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது, பயங்கரவாதத்தை பாதுகாக்கும ஒரு சட்டத்தைத் தான் அரசாங்கம் கொண்டு வர முயற்சித்து வருகிறது. இதனை இலங்கை நாடாளுமன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்கிறது.

தங்களை பதவிக்குக் கொண்டு வந்த சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தவே, அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளை செய்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# வடக்கிற்கு புதிதாக 71 தாதி உத்தியோகத்தர்கள் நியமனம்

(யாழப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் புதிய தாதி உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

வடமாகாணத்திற்கு என தெரிவு செய்யப்பட்ட 71 தாதி உத்தியோகத்தர்களுக்கும் நேற்று காலை வடமாகாண சுகாதார அமைச்சில் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு 24 தாதி உத்தியோகத்தர்களும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 12 தாதி உத்தியோகத்தர்களும், மன்னார் மாவட்டத்திற்கு 13 தாதி உத்தியோகத்தர்களும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 10 தாதி உத்தியோகத்தர்களும், வவுனியா மாவட்டத்திற்கு 12 தாதி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவி வந்த மயக்க மருந்து வழங்கும் வைத்திய நிபுணர் வெற்றிடத்திற்கு வைத்திய நிபுணர் ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு காது, மூக்கு, தொண்டை போன்றவற்றிற்கான விசேட வைத்திய நிபுணர் ஒருவரும் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றை தொடர்ந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய மகப்பேற்று வைத்திய நிபுணரை உடனடியாக மீண்டும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையில் ஈடுபடுத்த வடமாகாண சுகாதார திணைக்களம் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன் வைத்தனர்.

இந்நிலையில் குறித்த மகப்பேற்று வைத்திய நிபுணரை உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று கடமையினை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு மத்திய சுகாதார அமைச்சு குறித்த வைத்திய நிபுணருக்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும், ஒரு சில தினங்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் கடமையில் ஈடுபடுவார் எனவும் வடக்கு சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மேலும் தெரிவித்தார். (ம)

## 5-வது நாளாக...

கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், இராசதுரை திருவருள், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், இராசா பல்லவன் தபோரூபன், இராசதுரைஜெகன், சூரியகாந்தி யெஜச்சந்திரன், கிளிநொச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன், வவுனியாவை சேர்ந்த தங்கவேல் நிமலன் ஆகிய 8 கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன், மாகாண சபை உறுப்பினர். சயந்தன் ஆகியோர் கைதிகளை சென்று பார்வையிட்டனர். அவர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி இரண்டொரு நாளில் சாதகமான பதிலை தருவதாக கைதிகளிடம் கூறி சென்றனர். இந்த நிலையில் மக்கள் பிரதிநிதிகளின் வாக்குறுதியை நம்பி தமக்கு சாதகமான பதில் வரும் என எதிர்பார்த்துள்ளனர்.

4 நாட்கள் கடந்துள்ளமையால் உடல் சோர்வடைந்த நிலையில் தமது உணவு தவிர்ப்பை தொடர்ந்து வருகின்றனர். (ம-9)

மஹஜன சம்பத
திகதி 2018/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 3748
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 6 9 7 8 8 5
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 1361
எழுத்து வெற்றி இலக்கம்
14 31 48 51 53 35 10
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.09.17
சீட்டிழுப்பு இலக்கம் 1885
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 06 38 53 64
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/09/2018
சீட்டிழுப்பு இலக்கம் 280
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
I 09 20 39 47 55
தேசிய லொத்தர் சபை

## தமிழரின் பெரு...

நடத்திய மாபெரும் தமிழ் விழா- 2018 யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழினம் வரலாற்று காலகட்டத்தில் இருக்கிறது. ஒரு பெரிய பின்னடைவை சந்தித்துக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் இந்த கலாசார விழா தேவையான நிகழ்வாக நான் பார்க்கிறேன். தமிழர்களுடைய, தமிழ் இனத்தினுடைய வரலாற்றோடும் வாழ்வோடும் பொருந்தியுள்ள நிகழ்வாக இது அமைந்துள்ளது.

தமிழர்களுடைய கலை என்பது உலகின் மூத்த குடிமக்களாக இருக்கக்கூடிய தமிழர்களுடைய கலை என்பது உலகத்தின் அன்னைத்து கலைகளுக்கு முன்னோடி கலைகளாக இருப்பதை நாம் மறுக்க முடியாது. நாம் அதை எந்த அளவுக்கு உள்வாங்கியிருக்கிறோம் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

உலக அளவில் தமிழ் மொழியும் தமிழர்களுடைய கலையும் மிகவும் போற்றி வந்துள்ளமையை நாம் பார்த்துள்ளோம்.

தமிழர்களுடைய வாழ்வும் அரசியலும் தமிழர்களுடைய கலையுடன் வேறுபட்டவையல்ல. அவற்றில் இருந்து ஒன்றையொன்று பிரித்துப் பார்க்க முடியாத அளவு இணைந்துள்ளன.

அந்த அடிப்படையில் நாம் ஒவ்வொன்றாக பலவற்றை இழந்துவிட்டோம். தற்போது இருப்பவற்றை இழந்துகொண்டு இருக்கிறோம். இந்த காலகட்டத்தில் தமிழ் மொழியை எவ்வாறு மீட்டெடுக்க விரும்புகிறோமா அதே போன்று கலையை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

தமிழகத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் போது தமிழீழத்தில் சற்று வேறுபாடு உள்ளது. தமிழகத்தில் தமிழ் மொழி அழிந்துகொண்டு இருக்கிறது. ஈழத்தில் தமிழ் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அதன் அடிப்படையில் தமிழர்களுடைய கலையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய கடப்பாடு இங்கு உள்ளது. அடிப்படையில் தமிழர்களுடைய கலை என்பது அவர்களின் வாழ்வியல் அரசியல் வரலாற்றுடன் சேர்ந்துள்ளது. அவற்றை பிரித்துப்பார்க்க முடியாது.

தமிழ் மொழி தமிழர்களின் பண்பாடு, வரலாறு, கலை என்பன உலகம் முழுவதும் சென்றுள்ளது என்றால் அது ஈழத்தமிழர்களின் இடப்பெயர்வுக்கு பின்னால் வீரியமடைந்து சென்றுள்ளது.

மேலும் அழிந்து கொண்டிருக்கும் தமிழர்களின் கலைவடிவங்களை இங்கு காணக்கூடியதாக உள்ளது அவை நிகழ்வுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தாமல் தமிழ் மக்களின் வாழ்வுடன் பொருத்தி பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

நமது கலை மூலம், நாம் இழந்தவை நாம் சிந்திய இரத்தம் எமது வீரத்தை மீண்டும் கொண்டுவர முடியும்.

பின்னடைவை சந்தித்திருக்கலாம் இந்த பின்னடைவும் தோல்வியும் எமக்கு முன்னோக்கி செல்ல ஒரு பாடமாக இருக்க வேண்டும். அதற்கு கலை வடிவங்கள் பயன்படுத்தப்படவேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இதன் மூலம் உலக சமூகம் எம்மை திரும்பிப்பார்க்க வைக்க முடியும். அந்த அளவுக்கு எமது கலைகள் வலிமைவாய்ந்தவை. இந்த கலை வடிவங்கள் போராட்ட குணம் உள்ளவை. பக்தி, உணர்ச்சி, உத்வேகம் ஆள் மனதில் பதிந்திருந்தால் மட்டுமே கலையில் வெளிப்படுத்த முடியும்.

தமிழீழ மண்ணில் பலமுறை பல சந்தர்ப்பங்களில் நான் இங்கு நின்றுள்ளேன். வரலாற்றில் எதுவொன்றும் முடிந்ததாக இல்லை. வரலாறு என்பது அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கு நகர்த்திக்கொண்டிருக்கும் ஒன்றாகத்தான் உள்ளது. அதற்கு கலை வடிவங்கள் துணை நிற்கின்றன. அவற்றால் சாதிக்க முடியாதது, சொல்ல முடியாதது என்று எதுவும் இல்லை.

கலை மூலம் எமது வலி, எமது உணர்வு, எமது போராட்டம், இழப்பு, வேதனைகளை உலகமெங்கும் கொண்டு சேர்த்தவன் என்ற வகையில் கலை மீது நம்பிக்கை உள்ளது.

கலை மூலம், எமது இழப்பையும் நாம் சிந்திய இரத்தத்தையும் எமது வலியையும் வீரத்தையும் தற்போது தமிழர்களுக்கும் நினைவூட்டவேண்டியுள்ளது வேதனையாக இருக்கிறது.

தமிழர்களுக்கே நினைவூட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அவர்களுக்கே சொல்ல வேண்டியது அவசியம் இருக்கிறது. முதலில் நாம் உணர்வு பெற வேண்டும்.

வெறும் உணர்வு மட்டும் போதாது உணர்ச்சி மட்டும் போதாது நாம் அறிவோடு செயற்பட வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்

உணர்ச்சி அற்ற அறிவும் அறிவில்லாத உணர்ச்சியும் இனிமேல் தமிழனுக்கு தேவையில்லை. அறிவு முக்கியம் தேவை என்பதை உணரவேண்டும் அறிவோடு சேர்ந்த உணர்வு எந்த அளவுக்கு தேவையோ அதே போல உணர்வோடு சேர்ந்த அறிவும் தேவை. தனிதனியா செயற்படி முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## கிளிநொச்சியில்...

அரச புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சோதனையிட்ட கிளிநொச்சி பொலிஸார் குறித்த கஞ்சா பொதியை மீட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் குறித்த சம்பவம் தொடர்பில் சோதனை மேற்கொண்ட போது மெத்தை ஏற்றிய வாகனமொன்றில் மெத்தைக்குள் சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்ல தயாராக இருந்தபோதே பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

இதன் பின்னர் அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக தரித்து நின்ற முச்சக்கரவண்டியை சோதனை செய்த பொலிஸார் அதிலிருந்தும் கஞ்சா பொதி மீட்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர். இதன்போது குறித்த இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்டதாக தெரிவித்து நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு வாகனங்களிலும் இரண்டு கிலோ வீதம் நான்கு கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும். விசாரணைகளை தொடர்ந்து கிளிநாச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-312)

## சிகிச்சை பலனி...

குத்துக் காயத்துக்கு இலக்கானவரும் அடிகாயத்துக்கு இலக்கானவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கத்தியால் குத்தியவரும் அடிகாயத்திக்கு உள்ளானவருமான தேவசிங்கம் தீறன் என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரைத்தாக்கிய இருவரில் ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-312)

## முல்லைத்தீவில்...

புதுகுடியிருப்பு நகரப்பகுதியில் வாள்வெட்டு குழு ஒன்று தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதனை தொடர்ந்து பொலிஸார் சிவில் உடையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 25 வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் நேற்று பிற்பகல் கைது செய்துள்ளனர். குறித்த இளைஞனிடம் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதாகிய சந்தேக நபரிடம் விசாரணைகள் தொடர்வதாக குறிப்பிட்ட பொலிஸார், மேலும் வாள்வெட்டு குழுவை சேர்ந்த சந்தேக நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக் தெரிவித்துள்ளனர். (ம)

## 20ஆவது திருத்...

ள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 20ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்ட மூலத்தை மக்கள் கருத்தறியும் வாக்குமூலம் நிறைவேற்ற வேண்டும் என உத்தரவிடுமாறு கோரி கூட்டு எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இந்த மனுவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட 16 மனுக்களை கடந்த நான்கு நாட்களாக உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்திருந்தது.

இந்தநிலையிலேயே இதுதொடர்பிலான தமது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அறிவிக்கவுள்ளதாக உயர்நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது. (ம)

## ஜெனிவாவில்...

கலந்து கொண்டவர்கள், யுத்தத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பின்னர் கோஷங்களை எழுப்பியும், எதிர்ப்புப் பதாகைகளை ஏந்தியவாறும் ஜெனிவா முருகதாஸன் திடலை நோக்கி பேரணியாக சென்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையை முழுமையாக ஆராய வேண்டும் மற்றும் ஐ.நா அறிக்கைக்கு நீதி கிடைக்கும் பொருட்டு சர்வதேச நீதிமன்றின் ஊடாக விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகள் இதில் கோரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## முதலமைச்சர்...

குற்றப்பத்திரம் வாசிப்பதற்கு முன்பாக முதலமைச்சர் தரப்பு சட்டத்தரணி சில ஆட்சேபணைகளை எழுப்புவார் என தெரிகிறது.

இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால், முதலமைச்சர் மீதான குற்றப்பத்திரம் வாசிப்பது பின்தள்ளிச் செல்லும். ஆட்சேபணையை நீதிமன்றம் நிராகரித்தால், இன்றைய தினமே குற்றப்பத்திரம் வாசிக்கப்படும்.(ம-9)

## தனிப் பொலிஸ்...

பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த சிறப்புப் பொலிஸ் பிரிவினர் இன்று 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர்.

மேலும் போதைப்பொருள் பாவனை, போதைப் பொருள் கடத்தல் போன்ற போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் பொது மக்கள், 0113024803/ 0113024815/0113024820/0113024848/ 0113024850 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

## புலிகளை இனி...

அல்லவென அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யுத்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரும் உள்ளனர். இவர்கள் அனைவரையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களை சமூக மயப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும்.

இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கிய தன் பின்னர் இந்தப் பிரச்சினை குறித்து மீண்டும் பேச வேண்டியதில்லையெனவும் அவர் மேலும் கூறினார்.

கோட்டையிலுள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார். (ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
நிறஞ்சன் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு: 0763836129
(5705)

PERSONAL CLASS
PHYSICS
➤ Group Class ஆகவும் கற்க விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
A/L - 2019 Physics Day Class ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். கடந்த கால வினாக்கள், மாதிரி வினாக்கள், மாதிரி பரீட்சை என்பன நடத்தப்படும்.
➤ வெளிமாவட்ட மாணவர்களுக்கு தனியாகவும் நேர அட்டவணை வழங்கப்படும்.
ஆரம்பம்: 20.09.2018 வியாழன் 6.30pm
A/L - 2019: புலங்கள்
ஆரம்பம்: 21.09.2018 வெள்ளி 5.30pm
A/L - 2020: அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம்: 21.09.2018 வெள்ளி 6.30pm
ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் PGDE
T.P No: 0776116724
இடம்: ● 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோவில் அருகாமை, கியூடெக் முன்பாக)
● யாழ்.நகர் மத்தியில் (Jaffna Town)
தங்க விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்
(5704)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-3782)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

பயிற்சியுடன் வேலை வாய்ப்பு
பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
● விரும்பியவர்கள் பயிற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236
v2vacancies@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.